கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

23-12-1973

40 காசு





கோகுலம்

மலர் 2 : இதழ் 19
டிசம்பர் 23, 1973
பிரமாதீச, மார்கழி 8



அட்டைப்படக் குழந்தை:


கற்பனையில் உதித்த தாத்தா
கற்கண்டு தின்ன வாங்க.

வண்ணப்படம் : வித்யாவ்ரதா

உயிர்களிடத்து அன்பு வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்

— பாரதியார்

குல்லாக் குரங்கு — சாமா (19)



சந்தா விவரம் :

உள் நாடு :
ஒரு வருடம் ... ரூ. 10-00
ஆறு மாதம் ... ரூ. 5-00

இலங்கை :
ஆண்டுச் சந்தா : ரூ. 15-00
(இலங்கை நாணயப்படி)

இதர நாடுகள் :
ஆண்டுச் சந்தா ரூ. 25-00

★

மானேஜர், கோகுலம்
கல்கிப் பூங்கா, சென்னை - 600031

பிள்ளையார் பெருமை

ஆதிசேடனுக்கு அருளியது

ஒளிமயமாக விளங்குவது திருக் கயிலாய மலை. அம்மலையில் நவரத்தின மயமான ஆசனத்தில் மரகதக் கொடியனைய உமாதேவியாருடன் பவளக் குன்று போல் பரமசிவம் வீற்றிருந் தருளினார்.

திருமால், பிரமதேவர், இந்திரன், முதலிய இமயவர்கள், சந்திர சூரியர்கள் முதலிய நவக்கிரகங்கள், பதினெண் கணங்கள், சித்தர்கள், முத்தர்கள், பத் தர்கள் முதலிய யாவரும் வந்து வந்து சிவபெருமானை வணங்கி வேண்டிய வரங்களைப் பெற்றுக் கொண்டிருந் தார்கள்.

அரனுடைய திருமுடி மீதிருந்த ஆதிசேடன், "ஆ! இத்தனை பேரும் வந்து வந்து அரனாது அடிமீது வணங்கி வாழ்வும் வரமும் பெறுகின்றார்கள். நாம் அவருடைய திருமுடி மீது இருக் கின்றோம். நம்மினும் உயர்ந்தார் எவர்? நமது பெருமையே பெருமை" என்று எண்ணி ஆணவங் கொண்டான்.

ஆணவம்தானே அல்லலுக்கும் அழி வுக்கும் காரணம். ஆணவத்தால் கெட் டவர் பலர்.

சிவபெருமான் ஆதிசேடனுடைய ஆணவத்தை அறிந்தார். உடனே தமது திருக்கரத்தால் ஆதிசேடனைப் பற்றி இழுத்து நிலத்தின் மீது மோதினார். அவ்வளவில் ஆதிசேடன் வெள்ளி மலை யில் வீழ்ந்தான். அவனுடைய தலை ஆயிரம் பிளவுகளாகப் பிளந்து விட் டன. அதனால் ஆதிசேடன் பெரிதும் அல்லல்பட்டான். அறிவிற் சிறந்த அவன், "நாம் முன்போல் நன்னிலை யடைய வழி ஏது?" என்று சிந்தித் தான்.

நாரத முனிவர் சிவமூர்த்தியை வழி படும்பொருட்டு வந்தார். அங்கே ஆதி சேடன் இருந்த அவல நிலையைக் கண் டார். "ஆ! ஆ! இது என்ன அதிசயம்! ஆற்றலும் அறிவும் படைத்த ஆதிசேட னுக்கா இத்துயரம்?" என்று எண்ணி இரக்கமுற்றார்.

"அப்பா! ஆதிசேடா! உனக்கு ஏன் இந்தத் துன்பம் வந்தது?" என்று கேட் டார். ஆதிசேடனும் மறுமொழி கூறும் ஆற்றலின்றி நாணிக் கிடந்தான். நார தர் தம்முடைய மெய்யுணர்வால் நடந் ததை உணர்ந்து கொண்டார்.

"நாகராஜனே! ஆணவத்தால் உனக்கு இந்த அவலம் உண்டாயிற்று. உன் கவலை தீர்ந்து உயர் கதியைப் பெறும் வழியைக் கூறுகிறேன்; கேள். அடியார்களின் அல்லல் அகற்றும் ஐங் கரக் கடவுளை நினைந்து அவருடைய ஆறெழுத்து மந்திரத்தை ஓதி உய்வா யாக" என்று கூறி கணேச மந்திரத்தை உபதேசித்தருளினார்.

ஆதிசேடனுக்கு அம்மந்திர உபதே சத்தால் ஆற்றல் உண்டாகியது. அ இருந்து புறப்பட்டான். பிரவாள ந ரத்தையடைந்து, கணேச மூர்த்திை நினைந்து அவருடைய ஆறெழுத்தை உச்சரித்துக் கொண்டிருந்தான்.

ஆனைமுகக் கடவுள் திருவுளம் மகிழ் தார். பத்துப் படைக் கலங்களை ஏ திய பத்துத் திருக்கரங்களுடனும், சித்




புத்தி என்ற இரு தேவியர்களுடனு சிங்க வாகனத்தின் மீது தோன்ற காட்சியளித்தார்.

ஆதி சேடன் கணேச மூர்த்தியை கண்டு களிபெருவகை யடைந்தா நிலமிசை வீழ்ந்து பணிந்தான்; வினை தணிந்தான். பாடினான்; ஆடினான்.

கணேசர் கருணை புரிந்து "அன்பே ஆயிரம் பிளவுகளாக உள்ள உன் த

திருமுருக கிருபானந்தவாரியா



ஆயிரம் தலைகளாக விளங்கக் கடவது. நீ ஆயிரம் தலைகளுடன் முன்போல் நிலத்தைத் தாங்கியிருப்பாயாக. அன்றி ஐந்து தலைகளுடன் சிவபெருமான் சடை முடியில் அமர்ந்திருக்கக் கடவாய். நமக்கு உதர பந்தனமாகவும் விளங்கியிருப்பாயாக'' என்று கூறி வரமளித்தருளினார்.

விநாயகர் அண்ட கோடிகளையெல்லாம் கடந்த விசுவரூபத்தை எடுத்தார். ஆதிசேடனை எடுத்துத் தமது திருவயிற்றிலே சுற்றிக் கொண்டார். தேவர்கள் பூமழை பொழிந்தார்கள்.

ஆதிசேடன் அந்தப் பிரவாள நகரில் வேத விதிப்படி ஒரு திருக்கோயிலை உண்டாக்கி விநாயகரை அன்புடன் வழிபட்டு முன் போல் நற்பதம் பெற்றான்.



ஸாண்டா க்ளாஸ்

டிசம்பர் மாதம் பிறந்தாலே கிறிஸ்துமஸ் பண்டிகையின் நினைவு வரும். கிறிஸ்துமஸ் பண்டிகையின் நினைவு வந்த உடனே ஸாண்டா க்ளாஸ் அல்லது ஃபாதர் கிறிஸ்துமஸின் நினைவும் கூடவே வரும். பனிக் குல்லாய், பருத்த உடல், சிரித்த முகம், சிவந்த கன்னக் கதுப்புக்கள், குறும்பு கொப்பளிக்கும் கண்கள், கம்பளி உடை, தோளிலே ஒரு மூட்டை, அது நிறையக் குழந்தைகளுக்கான பரிசுப் பொருள்கள் — இதுதான் கிறிஸ்துமஸ் தாத்தாவின் தோற்றம். இவரைச் சுமந்து வரும் சறுக்கு வண்டியை எட்டுக் கலை மான்கள் இழுத்துவரும். ஸாண்டா க்ளாஸ் தாத்தா வசிக்குமிடம் உலகின் பனி மூடிய வட துருவத்தில் — இதெல்லாம் ஸாண்டா க்ளாஸ் கிறிஸ்துமஸ் தாத்தாவைப் பற்றிய நம்பிக்கைகள்.

கிறிஸ்துவக் குழந்தைகள் குதூகலத்துடன் வரவேற்கும் இந்தத் தாத்தா உண்மையிலேயே உயிருடன் இருந்தவரா ? எப்போது வாழ்ந்தார்? கிறிஸ்துமஸ் பண்டிகையின் ஓர் அங்கமாக இடம்



பெற்றுப் புகழடைந்து விட்ட — ஸாண்டா க்ளாஸின் ஆரம்பம் எப்படி?

ஸாண்டா க்ளாஸ் என்ற கிறிஸ்துமஸ் தாத்தா ஒரு கற்பனைப் பாத்திரம் என்றால் உங்களுக்கு வியப்பாக இருக்கும். ஆனால் அது உண்மை. நிகோலஸ் என்று ஒரு புனிதப் பாதிரியார் இருந்தார். ஆசியா மைனரில் உள்ள படாரா (Patara) என்ற ஊரில் பிறந்தவர் நிகோலஸ். பதினாறு நூற்றாண்டுகளுக்கு முன்பு துருக்கியிலுள்ள மிரா (Myra) என்ற ஊரில் பிஷப்பாக இருந்தார். அன்புள்ளம் கொண்டவர். ஏழைகளின் துன்பம் துடைப்பதில் துடியாக இருந்தார். துன்பமுற்றவர்களுக்குத் தாம் யார் என்பதைச் சொல்லாமலே உதவுவார் நிகோலஸ். ஊர் ஊராக, கிராமம் கிராமமாகப் போய்க் கஷ்டப்படுபவர்களுக்கு உதவுவார் நிகோலஸ் பாதிரியார். ஒரு சமயம் ஓர் ஏழைக் குடியானவன் தன்னுடைய மூன்று பெண்களுக்குத் திருமணம் செய்யப் பரிசப் பணம் இல்லாமல் ஏங்கிக் கொண்டிருந்தான். நிகோலஸ் பாதிரியார் என்ன செய்தார் தெரியுமா ? அந்தக் குடியானவனின் வீட்டுக் குடிசையின் புகைப் போக்கி வழியாகப் பொற்காசுகள் கொண்ட மூன்று மூட்டைகளைப் போட்டார், அவனுடைய மூன்று பெண்களுக்கும் கல்யாணம் நடப்பதற்காக. இப்படி நிகோலஸ் பாதிரியாரின் அன்புள்ளத்தையும், ஏழைகளுக்கு உதவும் உதார குணத்தையும் விளக்க எத்தனையோ கதைகள் உண்டு. அவருடைய நினைவாகத்தான் கிறிஸ்துமஸ் தாத்தாவின் (ஃபாதர் கிறிஸ்துமஸ்) பாத்திரம் உருவாயிற்று. ஆனால் இன்று உலகம் முழுவதிலும் புகழ்பெற்று விளங்கும் ஸாண்டா க்ளாஸ் உருவ அமைப்பாக அது ஆதியில் இல்லை. பல நூற்றாண்டுகள் வரை கிறிஸ்துமஸ் தாத்தா என்பவர் கௌரவம் மிக்க, நிதானமான

ஒரு வயோதிகராகத்தான் உருவகப் படுத்தப்பட்டு வந்தார். பள்ளிக்கூட விழாவில் குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கும் ஒரு முதியவரைப் போலவே இவர் உருவகப்படுத்தப் பட்டார் — நிகோலஸின் நினைவாக. கலைமான்கள் பூட்டிய வண்டியோ, பனிக் குல்லாயோ கம்பளி உடையோ கிறிஸ்துமஸ் தாத்தாவின் பாத்திரத்துக்குக் கிடையாது. கிறிஸ்துமஸுக்கு முதல் நாள் மாலை இவர் வீடு தோறும் விஜயம் செய்வார் என்ற பழக்கமும் ஆதியில் கிடையாது. அவருடைய இருப்பிடம் வட துருவம் என்ற நம்பிக்கையும் ஆதியில் இல்லை. அப்படியானால் இன்றைய சாண்டா க்ளாஸை உருவகப்படுத்திய வர் — யார், எப்போது?

கடந்த ஆண்டுதான் இன்றைய ஸாண்டா க்ளாஸ் தோன்றி 150 ஆண்டுகள் ஆயின. 1822ம் ஆண்டில் தான் இன்றைய குதூகலமிக்க குண்டுத் தாத்தாவான ஸாண்டா க்ளாஸ் உருவானார். இவரை உருவாக்கியவர் ஓர் அமெரிக்கப் பேராசிரியர். டாக்டர் க்ளெமெண்ட் ஸி. மூர் என்பது இவர் பெயர். நியூயார்க் நகரில் உள்ள கொலம்பியா சர்வகலாசாலையில் ஒரு பேராசிரியர்.

தம் நண்பர்களுக்கு கிறிஸ்துமஸ் பரிசுகளை வழங்குவதற்காகப் பனி மூடிய தெருக்கள் வழியே குதிரைகள் இழுத்துச் செல்லும் 'ஸ்லெட்ஜ்' வண்டியில் போய்க் கொண்டிருந்த போதுதான் மூரின் கற்பனையிலே ஸாண்டா க்ளாஸ் உருவானார். குளிர் காற்று வீசும் அந்த இரவில் இப்படிப் போய்க் கொண்டிருக்கும்போது அவருடைய ஒன்பது குழந்தைகளும் புனித நிகோலஸ் பாதிரியாரைப் பற்றி விவரிக்கும்படி அன்று துளைத்தெடுத்தது நினைவுக்கு வந்தது. தம் குழந்தைகளின் வேண்டுகோளை நிறைவேற்றுவதற்காக நிகோலஸ் பற்றிய ஒரு பாடலை உருவாக்கினார் மனத்துக்குள். ஆங்கிலத்தில் கவிதை புனையும் ஆற்றல் படைத்தவர் மூர். தம் குழந்தைகளுக்கு நிகோலஸ் பாதிரியாரைப் பற்றிக் கூறுவதற்காக உருவாக்கிய ஒரு பாத்திரம்தான் இன்றைய சாண்டா க்ளாஸ்.

''கிறிஸ்துமஸுக்கு முதல் நாள் மாலை வீதியிலோ, வீட்டின் வெளியிலோ, யாருமே இல்லை — ஒரு சுண்டெலிகூட! புகைப் போக்கிகளின் அருகில் தங்கள் காலுறைகளைத் தொங்க விட்டிருந்தன குழந்தைகள். புனித பாதிரியார் நிகோலஸ் சிம்னியின் வழியே வருவார். வந்து காலுறைகளுக்குள் பரிசுப் பொருள்களைப் போட்டு விட்டுப் போவார்...''

மூரின் பாடல் இப்படிப் போகிறது. ''எட்டுக் கலைமான்கள் பூட்டிய சறுக்கு வண்டியில் வருகிறார் சாண்டா க்ளாஸ். அவர் ஒரு மாயக்காரர். வீட்டின் மேலாக விண்வெளியிலே கலைமான் வண்டியோடு பறந்து வருவார். சிம்னியின் அருகே பொம்மை மூட்டையோடு வந்து குதிப்பார். குழந்தைகளின் உள்ளம் கவர்ந்த அவர் அன்புள்ளம் கொண்டவர். அகன்ற முகம், சிறிய தொப்பை, சிரிக்கும்போது கல கலவென்று ஒலி எழும்பும்...''

மூரின் இந்தக் கற்பனைப் பாத்திரத்தைக் கேட்ட அவரது குழந்தைகள் மகிழ்ச்சிக் கூத்தாடினார்கள். புனித நிகோலஸின் விஜயம் (A Visit from Saint Nicholas) என்ற இந்தப் பாடலைத் திரும்பத் திரும்பப் படிக்கச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்து போனார்கள். ஆனால் க்ளெமெண்ட் மூர் தம்முடைய இந்தப் பாடலையும் தாம் உருவாக்கிய புதிய கிறிஸ்துமஸ் தாத்தாவையும் உலகுக்கு அறிமுகப் படுத்தவில்லை. மூரினுடைய நண்பர் ஒருவர் இதை ரகசியமாகப் பிரதியெடுத்து ஒரு சின்னப் பத்திரிகைக்கு அனுப்பி வைக்காதிருந்தால் ஸாண்டா க்ளாஸ் உலகில் தோன்றி இருக்கவே மாட்டார். அந்த நண்பர் செய்த காரியத்தால் அடுத்த ஆண்டு கிறிஸ்து



மஸுக்கு முன்னால் ('Twas the night before christmas') என்ற இப்புகழ் மிக்க பாடல் பிரசுரமாயிற்று. பாடலைப் படித்தவர்கள் அதன் அழகில், எளிமையில் சொக்கிப் போனார்கள். அதன் ஆசிரியர் யார் என்பதை அறிய ஆவல் கொண்டார்கள். ஆனால் க்ளெமெண்ட் மூர் அப்பாடலின் சிருஷ்டிகர்த்தாவாகத் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. அவர் எத்தனையோ சிறந்த இலக்கியங்களையெல்லாம் உருவாக்கி யிருந்தார். அதனால் புகழ் பெற வேண்டும் என்று விரும்பிய அவர் இந்தப் புதிய ஸாண்டா க்ளாஸ் பாத்திரப் படைப்பின் மூலம் புகழ் பெறுவதை விரும்பவில்லை. அந்தப் பாடலை எழுதி 22 ஆண்டுகளுக்குப் பிறகே அதைத் தாம் எழுதியதாக ஒப்புக் கொண்டார் மூர். அந்த இடைக்காலத்தில் அப்பாடலின் பெருமை உலகெங்கும் பரவி ஸாண்டா க்ளாஸ் பாத்திரமும் புகழ் பெற்றதாகி விட்டது. குழந்தைப் பாடப் புத்தகங்களிலும் பள்ளிப் பாடப் புத்தகங்களிலும் மூரின் படைப்பான ஸாண்டா க்ளாஸ் இடம் பெற்று விட்டார். அந்த அற்புதப் படைப்பாளருக்கோ அதனால் ஒரு பென்னிகூட வருமானமில்லை. ஆனால் மூர் அதற்காக வருந்தவில்லை. ஸாண்டா க்ளாஸ் தாத்தாவை எண்ணி, எண்ணற்ற குழந்தைகள் மகிழ்வதையே தமது வெகுமதியாக மதித்தார் மூர். கிறிஸ்துமஸ் தாத்தா என்ற ஒரு கடினமான உருவை மிக, எளிதாக, சிரிப்பூட்டும்படியாக, கேளிக்கையும் மகிழ்ச்சியும் கொண்ட ஓர் பாத்திரமாக மாற்றியதற்காக மூர் பிற்காலத்தில் பெருமையே அடைந்தார். குழந்தைகள் மட்டுமல்லாமல் பெரியவர்களும் கூட க்ளெமெண்ட் மூரின் இந்தப் புதிய கிறிஸ்துமஸ் தாத்தாவை மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள்; தங்கள் இளமை நினைவுகளையெல்லாம் அவரது வரவு புதுப்பிப்பதினால். கம்யூனிஸ்ட் நாடுகள் கூட ஸாண்டா க்ளாஸ் தாத்தாவை அங்கீகரித்தன. ரஷ்யக் குழந்தைகளுக்கு அவர் 'பனித் தாத்தா' Father Winter. புனித நிகோலஸ் பாதிரியாரின் உதார குணத்துக்காக உருவாக்கப்பட்ட கிறிஸ்துமஸ் தாத்தாவை ஓர் அமெரிக்கப் பேராசிரியர் தம் குழந்தைகளுக்காகக் குதூகல மிக்க ஒரு குண்டுத் தாத்தாவாக்கி உலகக் குழந்தைகளின் மகிழ்ச்சிக்கு உரியவராக்கி விட்டார். ஸாண்டா க்ளாஸ் பிறந்த கதை இதுதான்.

— கிருஷ்ணவேணி

போன இதழ் கோகுலத்தில்
பொம்மை செய்ததாரோ என்று
போட்டிருந்தோம் கேட்டு.
பொம்மை செய்த பொற்கரத்தின்
புகழ்மணக்கும் கனவரவர்
போட்டுவச்ச கடிதமிதோ!
-ஆர்.

அன்புடையீர்,

9—12—73 பிரதி கோகுலம் 20ம் பக்கத்தில் "அடேடே! ராஜாஜி தாத்தாவுக்கு எத்தனை சுத்தமான இதயம்" என்னும் தலைப்பில் பிரசுரித்த புகைப்படத்துக்கு நன்றி.

இந்தப் பொம்மை ஸ்ரீமதி சரஸ்வதி பரமசிவனால் உருவாக்கப்பட்டது. அதற்காகவே ஒரு சாய்வு நாற்காலியும் செய்து, "இந்தோ - ஜப்பான் எக்ஸிபிஷ"னிலும் வைக்கப்பட்டு ஜனங்களால் மிகவும் விரும்பப்பட்டது. இந்தப் பொம்மையைப் பார்த்தவர்கள் எல்லாம் பிரீதியுடன் சென்றதைப் பார்க்க மிகவும் சந்தோஷமடைந்தோம்.

ராஜாஜி எப்போதும் எங்களுடனேயே இருப்பதுபோன்றிருக்கிறது. என் பேரப் பையன் சி. வாசு, என் ஸ்டெதாஸ்கோப்பை எடுத்துக்கொண்டு அவருடைய இதயத்தைப் பார்க்கும்போது அதையே புகைப்படமாக்கினோம்.

இப்படிக்கு
எஸ். பரமசிவன்
சென்னை-35

புதிய சைக்கிள்

வாண்டுமாமா

அன்று ஞாயிற்றுக்கிழமை.

கிட்டு தன் சைக்கிளை வெறுப்போடு பார்த்தான். அதைக் கண்டாலே இப்போது அவனுக்கு எரிச்சலாக வந்தது. அவன் ஐந்தாவது படிக்கும்போது வாங்கிக் கொடுத்த சைக்கிள் அது. இரண்டு வயதிலேயே மூன்று சக்கர வண்டியில் ஊர்வலம் வந்தவன் அவன். அதன் பிறகு ஐந்தாவது வகுப்புக்குப் போனதும் அவன் உயரத்துக்கு ஏற்ற படி ஒரு சின்ன 'பை சைக்கிளை' வாங்கிக் கொடுத்திருந்தார் அவன் அப்பா. வாங்கிய புதிதில் அவன் அதை விட்டு இறங்கியதே இல்லை. முடிந்திருந்தால் அதிலேயே படுத்துக்கூடத் தூங்கியிருப்பான். அப்படி அதன் மீது உயிராக இருந்தவன் இப்போதுவெறுப்பானேன்?

கிட்டு இப்போது ஒன்பதாவதுக்கு உயர்ந்து விட்டான். அவன் வகுப்புப் பையன்கள் எல்லாம் ஜம்மென்று பெரிய சைக்கிளில் வந்து கம்பீரமாக இறங்குகிறார்கள். இவன் இந்தக் குட்டிச் சைக்கிளில் போனால்? கிண்டலும் கேலியும் தான்! தவிர, நாலு வருஷங்களில் கிட்டுவின் ஓட்டத்துக் கெல்லாம் ஈடுகொடுத்திருந்த அது பழசாகிப் போய் விட்டது. அதை இப்போது அவன் சீந்துவதே இல்லை.

புழுதி படிந்து கவனிப்பின்றி அவுட்ஹவுஸ் மூலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தன் சைக்கிளைப் பார்த்தபடியே வெளியே கிளம்பினான் கிட்டு. வீட்டிலிருக்கவே பிடிக்கவில்லை. அவன் நண்பர்களெல்லாம் சைக்கிளில் ஊர் சுற்றக் கிளம்பி விட்டார்கள். இவன் இந்தச் சைக்கிளில் அவர்களோடு போக விரும்பவில்லை.

அடுத்த தெருவை நோக்கி அவன் கால்கள் தானாக நடை போட்டன. இப்படிப் 'போர்' அடிக்கும்போதெல்லாம் அவன் சந்துருவின் வீட்டுக்குப் போவதுதான் வழக்கம். சந்துரு பெரிய எஞ்சினீயருடைய ஒரே செல்லப் பிள்ளை. நாலாவதுதான் படிக்கிறான். ஆனால் அவனிடம் ஏராளமான விளையாட்டுச் சாமான்கள் குவிந்து கிடந்தன. அவன் மாமா தில்லியில் இருந்தார். அவனுக்கு மாதாமாதம் ஏதாவது பார்சல் அனுப்பிக் கொண்டேயிருப்பார்.

அவன் வயதுக்கு அவனால் விளையாட முடியாத விளையாட்டுச் சாமான்களையெல்லாம் அனுப்பிக் கொண்டிருப்பார் அவன் மாமா.

சந்துருவின் அம்மாவுக்குக் கிட்டு வந்துவிட்டால் ஒரே சந்தோஷம். அவள் குழந்தைக்கு இத்தனை விளையாட்டுப் பொருள்களையும் இயக்கிக் காட்டிக் கூட விளையாட அக்கம்பக்கத்தில் யாரும் கிடையாது. கிட்டு வந்தானானால் எல்லாவற்றையும் சந்துருவுக்கு முடுக்கிக் காட்டுவான். கூட விளையாடி மகிழ்விப்பான். ''சந்துரு பெரியவனாகும் வரை இவைகளையெல்லாம் தூக்கிப் பரண் மீது போட்டுவிடலாம். ஆனால் அவன் மாமாவின் மனம் புண்படுமே என்றுதான் அப்படிச் செய்யவில்லை. ஏதோ நீ வருகிறாயோ சந்துருவுக்கு இவைகளை விளையாட முடிகிறது'' என்று பாராட்டுவான். சந்துருவுக்குப்






பாதிப் பொருள்களில் நாட்டமே கிடையாது. டணக்காரப் பிள்ளை.

ஒரு நாள் தில்லியிலிருந்து அவன் மாமா கடிதம் போட்டிருந்தார். சந்துருவுக்கு அவர் ஓர் அதிசயமான பொருளை லாரி மூலம் அனுப்பி இருக்கிறாராம். அதைக் கண்டதும் சந்துருவின் அம்மா, ''இருப்பது போதாதா? இன்னும் என்ன? அதுவும் லாரியில் வருகிறதாமே?'' என்று வியந்து போனாள். அப்போது அங்கு கிட்டு வந்தான்.

''யானைக் குட்டியோ? அல்லது தாஜ் மகாலை 'பாக்' செய்து அனுப்பி இருக்கிறாரோ?'' என்றான் கிட்டு.

''அதென்னவோ தெரியவில்லை. சந்துரு அதைப் பார்த்துப் பிரமித்துப் போவானாம். அது மட்டுமல்ல. இன்னும் நாலைந்து நாட்களில் அவரே இங்கு



வரப் போகிறாராம். அப்போது அந்த அதிசயப் பொருளை வைத்துக் கொண்டு சந்துரு விளையாடி மகிழ்வதை அவர் பார்த்து ஆனந்திக்க வேண்டுமாம். அப்படி என்னமாகத்தானிருக்கும்?''

''பொம்மை டாங்கியா, மெஷின் கன்னா?'' கற்பனை உலகில் சஞ்சரிக்கலானான் கிட்டு.

''என்னவோ தெரியவில்லை. எதையாவது வாங்கி அனுப்பிவிடுவார். இவன் எங்காவது காலைக் கையை ஒடித்துக் கொண்டு நிற்பான்'' என்றாள் சந்துருவின் அம்மா.

இரண்டு நாட்களில் மாமா அனுப்பிய அதிசயப் பொருளை லாரிக்காரன் வீட்டு வாசலில் கொண்டு வந்து இறக்கி விட்டான். 'என்ன வரப் போகிறதோ?' என்ற தவிப்புக்கு ஒரு முடிவு ஏற்பட்டுவிட்டது. வந்தது ஓர் அழகான புத்தம் புதிய சைக்கிள். அதைக் கள்ளிப் பலகைப் பாக்கிங்கிலிருந்து பிரிக்கக் கிட்டுதான் உதவினான். ஆழ்ந்த பச்சை வர்ணத்தில் பளபளத்துக் கொண்டிருந்தது புது சைக்கிள். டைனமோ லைட், வால் விளக்கு எல்லாமே செட்டாகப் பொருத்தி யிருந்தன. மணிக்குப் பதில் புது மாதிரியாக பாட்டரியில் இயங்கும் சைரன் இருந்தது. பெரியவர்கள் விடும் பெரிய சைக்கிள் அது.

''சந்துருவுக்கு இது ரொம்பப் பெரிசு. அவன் பெரியவனாகும் வரை இதைப் பரணில் போட்டு வைக்க வேண்டியது தான்'' என்றாள் அவன் அம்மா.

சைரனை அழுத்தி அது அலறுவதைக் கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்த சந்துரு, ''முடியாது, பரண் மீது போடக் கூடாது'' என்றான் அழுத்தம் திருத்தமாக.


''அசட்டுத்தனமாகப் பேசாதே, சந்துரு. இப்போது இந்தச் சைக்கிளை உன்னாலே ஓட்ட முடியாது'' என்றாள் அம்மா.

''என்னால் ஓட்ட முடியும்'' என்றான் சந்துரு.

''முடியும்.... நீங்கள் கவலைப்படாதீங்க. நான் அவனுக்குச் சைக்கிளை விடக் கற்றுத் தருகிறேன்'' என்றான் கிட்டு. புது சைக்கிளைக் கண்டதிலிருந்து கிட்டுவுக்கு உடம்பெல்லாம் பரபரத்துக் கொண்டிருந்தது. அதைக் கொண்டு போய் அவன் அம்மா பரணில் போட்டு விட்டால்? ஆனால் சந்துருவின் அம்மாவுக்கோ இத்தனை பெரிய சைக்கிளில் தன் பிள்ளை ஏறி விட்டு, கையில் காலில் காயம் பண்ணிக் கொள்ளப் போகிறானே என்று கவலை. கிட்டு சைக்கிள் விடக் கற்றுத் தர முன் வரவே அவளுக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

''நிஜமாகவா கிட்டு? உனக்கு நேரமிருக்குமா? சந்துருவுக்கு நீயே கற்றுக் கொடு. கற்றுக் கொள்ளுவது ரொம்பக் கஷ்டமாக இருக்குமோ?'' என்றாள்.

''அப்படியொன்றும் கஷ்டமில்லை. ஆனால்... முதலில்...'' என்று சொல்ல வந்தவன் கொஞ்சம் தயங்கினான். ஆரம்பத்தில் கீழே விழத்தான் வேண்டியிருக்கும். காயம் படத்தான் செய்யும்.



இதைச் சொன்னால் சந்துரு அம்மா எப்படி எடுத்துக் கொள்ளுவாளோ என்று பயம் வந்துவிட்டது கிட்டுவுக்கு. ஆகவே சமாளித்தான். ''நான் சைக்கிள் சீட், ஹாண்டில்பார் எல்லாவற்றையும் இறக்கிவிடுகிறேன். அப்போது சந்துருவுக்கு இதன்மீது ஏறிப் பெடல் செய்யச் சுலபமாக இருக்கும். வாடா சந்துரு. என் வீட்டுக்கு அருகே மைதானம் இருக்கு பார். அங்கே போய்ச் சைக்கிள் விடப் பழக்கித் தருகிறேன்'' என்று புது சைக்கிளைத் தள்ளிக் கொண்டு நடந்தான்.


வீட்டுக்குப் போனதும் கிட்டு புது சைக்கிளின் சீட்டையும் ஹாண்டில்பாரையும் கடைசி வரை கீழே இறக்கிச் சரி செய்து கொண்டிருந்தபோது சந்துரு அதன் ஸைரனை அழுத்தி அழுத்தி அலற வைத்துக் கொண்டிருந்தான்.

''வாடா சந்துரு, மைதானத்துக்குப் போவோம். எல்லாம் அட்ஜஸ்ட் பண்ணிவிட்டேன்'' என்று ஸ்டைலாகச் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு முன்னால் நடந்தான். பக்கத்தில் கார்ப்பொரேஷன் மைதானம் இருந்தது. மெத்தென்ற புல் வளர்ந்து. கீழே விழுந்தாலும் பிரமாதமாக அடிபடாது. இரண்டே இரண்டு மரங்கள் மட்டுமே இருந்தன. மற்றப்படி தடங்கல் ஏதும் கிடையாது.

மைதானத்துக்கு வந்ததும் கிட்டு சைக்கிளை ஒரு நிலையில் உறுதியாக நிறுத்திக் கொண்டு சந்துரு அதன் மீது ஏறி உட்கார உதவினான். அது அத்தனை சுலபமாக இல்லை. ஹாண்டில்பாரைப் பிடித்துக் கொள்வதற்குப் பதில் சந்துரு கிட்டுவின் தலைமயிரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு தொங்கினான். அவனது அசுரப் பிடியிலிருந்து தன் தலைமுடியை விடுவித்துக் கொண்டு சைக்கிளையும் பாலன்ஸ் தவறாமல் நிறுத்திக் கொள்வதற்குள் கிட்டுவின்பாடு ரொம்பத் திண்டாட்டமாகி விட்டது! ஒரு வழியாக அவன் கைகளை சைக்கிள் ஹாண்டில்பாருக்கு மாற்றி ஒரு காலைப் பெடலில் வைக்கும்படி செய்தான். ஆனால் மற்றொரு காலோ? இன்னொரு பெடலுக்கும் அதற்கும் வெகுதூரம் இருந்தது. ''பரவாயில்லை. இந்தக் காலால் பெடலை உதைக்கும்போது இது கீழே போய், கீழுள்ள அது மேலே வரும். அப்போது அதில் இந்தக் காலை வைத்து மிதி, சரியாகிவிடும்'' என்று உபதேசம் செய்தான் சந்துருவுக்கு ஆசானான கிட்டு.

ஆனால் மாணவ சிகாமணியான சந்துரு, ''முடியாது, போ!'' என்று முழக்கினான். கிட்டு அதை லட்சியம் செய்யாமல் சைக்கிளைக் கொஞ்ச தூரம் தள்ளிக் கொண்டே சென்று அந்த வேகத்திலேயே தன் பிடியை விட்டுவிட்டான். அவ்வளவுதான்! நிதானம் தவறிய சைக்கிள் வளைந்து, நெளிந்து, சுழன்று, மரத்தைத் தேடிப் போய் மோதித் தொபுகடீரென்று விழுந்தது! அது மரத்தைத் தொடுவதற்குமுன்னாலேயே சந்துருவின் அலறல் ஆரம்பமாகிவிட்டது. கீழே விழுந்த பிறகு கேட்கவா வேண்டும்?

கிட்டு ஓடிப் போய் முதலில் சைக்கிளைத் தூக்கி நிறுத்தினான். பிறகு சந்துருவைத் தூக்கி, ''இதற்குப் போய்





இப்படி அழுவார்களா? நீதான் ரொம்ப ஜோராக அத்தனை நேரம் தனியாகச் சைக்கிளில் உட்கார்ந்து சமாளித்தாயே?'' என்று பாராட்டினான். ஒரு வழியாகச் சந்துருவின் அழுகை ஓய்ந்தது. மறுபடியும் அவனைச் சைக்கிளில் ஏற்றி அதே மாதிரிக் கொஞ்ச தூரம் ஓட்டித் தள்ளிவிட்டான் கிட்டு. இந்த முறையும் முன்போலவேதான். ஆனால் வேறு ஒரு மரத்தில் போய் மோதி விழுந்த சந்துருவின் கூச்சல் முன்னைவிட அதிகமாகியது. ''நான் வீட்டுக்குப் போகிறேன்'' என்ற பல்லவியும் சேர்ந்து கொண்டது.

'' அசடு மாதிரிப் பேசாதே. புது சைக்கிளை விட ஆசையாக இருக்காதோ ? நிஜமாகச் சொல்றேன் சந்துரு. நீ அப்படியொன்றும் மோசமாக விடவில்லை. நன்றாகவே சமாளிக்கிறாய். நான் ஆரம்பத்தில் ஆயிரம் தடவை விழுந்திருக்கிறேனாக்கும்'' என்றான் கிட்டு.

'' நான் ஆயிரம் தடவை விழமாட்டேன் போ...!'' என்று கதறினான் சந்துரு.

கிட்டு சற்று யோசித்தான். சந்துரு போய்விட்டால் புத்தம் புது சைக்கிளைக் கையாள முடியாமல் போய்விடுமே என்ற நினைப்பு வேதனையாக இருந்தது. ''சந்துரு, சைக்கிள் கற்றுத் தருவதென்றால் இரண்டு பேர் வேண்டும். என் நண்பன் ஒருவன் இருக்கிறான். அவனைக் கூட்டி வருகிறேன். எங்களில் ஒருவர் உன்னைச் சைக்கிளில் ஏற்றித் தள்ளிவிட மற்றவர் உன்னுடனேயே சைக்கிளோடு ஓடி வருவோம். நீ விழும்போது — விழவே மாட்டாய் — சட்டென்று பிடித்துக் கொள்ள.... என்ன சரிதானே?'' என்று கேட்டான் கிட்டு.

''...நான் சைக்கிளில் ஏறவே போவதில்லை நான் வீட்டுக்குப் போகிறேன்'' என்றான் சந்துரு.

'' இதோ பார், இந்த ரயில் வண்டியை வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிரு'' என்று வீட்டுக்குள் ஓடிப் போய் அவன் அப்பா எப்போதோ வாங்கிக் கொடுத்த ரயில் வண்டி செட்டைக் கொண்டு வந்து கொடுத்தான். எத்தனையோ பொம்மைகள் இருந்தும் சந்துருவிடம் இந்த ரயில் செட் இல்லை. சாவி கொடுத்தால் சிக்கு சிக்கென்று தண்டவாளத்தில் அழகாக ஓடியது அது. ''இதைக் கீ கொடுத்து ஓடவிட்டுக் கொண்டிரு. நான் இதோ வந்து விடுகிறேன்'' என்றான் கிட்டு.

''முடியாது'' என்று சந்துரு வழக்கம் போல முழக்கினாலும் அவன் விரல்கள் ரயில் எஞ்சினின் சாவியை முடுக்கிக் கொண்டிருந்தன.

கிட்டு புது சைக்கிளில் தாவி ஏறி அமர்ந்து சிட்டாகப் பறந்தான் சீனுவின் வீட்டை நோக்கி. புது சைக்கிளைக் கண்ட சீனுப் பயல்; சில நாட்களாகக் கிட்டுவிடம் காய் விட்டிருந்ததையும் மறந்து' ஏதுடா இது?' என்று அகலத் திறந்த கண்களோடு ஓடிவந்தான். அவனைச் சரிப்படுத்தித் தன்னுடன் அழைத்து வரக் கிட்டு அதிகச் சிரமப் படவில்லை.

''இதோ பார் சந்துரு.... ரொம்ப சிம்பிள்! வீணாகப் பயப்படாதே. நான் உன்னைச் சைக்கிளில் ஏற்றி ஸ்டெடியாகத் தள்ளிவிடுவேன். நீ பெடல் பண்ணியபடி பயப்படாமல் போ. சீனு உன்னுடனேயே வருவான். சைக்கிள் சாய்ந்தாலோ நீ விழப் போனாலோ 'கப்'பென்று பிடித்துக் கொள்ளுவான்'' என்று போதனை செய்தான் சந்துருவுக்குக் கிட்டு.

''முடியாது போ'' என்று ஒரே வார்த்தையில் பதில் கூறிவிட்டு ரயில் எஞ்சினை இயக்குவதில் மூழ்கிப்போனான் அவன்.

''கேளுடா சந்துரு. நான் உங்கம்மாவுக்கு வாக்குக் கொடுத்து விட்டேன், எப்படியும் உனக்குச் சைக்கிள் கற்றுத் தந்துவிடுகிறேன் என்று. கற்றுத் தரத்தான் போகிறேன்.''

சந்துரு அசைந்து கொடுக்கவில்லை. கிட்டுவின்பாடு சங்கடமாக இருந்தது. ''அவனை அப்படியே விட்டுவிடு. தானாக வருவான். என் தம்பிகூட இப்படித்தான்'' என்றான் சீனு.

''அவன் மனம் மாறும் வரை நாம் என்ன செய்வதாம் ?''

''ஏன்? இந்தப் புது சைக்கிளில் நாம் ஒருவர் மாற்றி ஒருவர் 'ஜாலி ரைட்' போய்வருவோம். இந்தத் தெரு வழியாகத் தேர் நிலை வரை போய்த் திரும்பி வருவது'' என்றான் சீனு. அவனுக்கும் எப்படியாவது புது சைக்கிளில் சவாரி செய்து பார்க்க ஆசை. கிட்டுவுக்கு இந்த ஏற்பாடு சரி என்றே பட்டது. இருவரும் மாற்றி மாற்றிப் புது சைக்கிளை ஆசை தீர ஓட்டி மகிழ்ந்தார்கள். சந்துருப் பயல் பொம்மை ரயிலைச் சுற்ற விட்டுக் கொண்டிருந்தான்.



மறு நாளும் கிட்டு சந்துருவோடும் சைக்கிளோடும் மைதானத்துக்கு வந்தான். சீனுவும் கூடத்தான். ஆனால் சந்துரு ரயில் தண்டவாளங்களை இணைத்து, அதில் எஞ்சினுக்குச் சாவி கொடுத்து முடுக்கி ஓட வைத்து மகிழ்ந்து கொண்டிருந்தான். புதுச் சைக்கிளில் கிட்டுவும் சீனுவும்தான் பவனிவந்தார்கள். இப்படியே இரண்டு மூன்று நாட்கள் ஓடிவிட்டன.

அன்று கிட்டு சீனுவிடம் சொன்னான்: ''சீனு, இவன் மாமா அநேகமாக நாளைக்கு வருவார் என்று தெரிகிறது. அவர் வருவதற்குள் இந்தப் பயலுக்கு எப்படியும் சைக்கிள் விடக் கற்றுத் தந்து விடுவதாக நான் இவன் அம்மாவிடம் 'பிராமிஸ்' செய்து விட்டேண்டா. ஆகையாலே எப்படியும் அதை நிறைவேற்றியாகணும்.''

கிட்டுவும் சீனுவும் எப்படி யெல்லாமோ சந்துருவுக்கு 'ஐஸ்' வைத்தும் கூட அவன் சைக்கிளில் ஏற மறுத்து விட்டான்.

''இவனுக்குச் சைக்கிள் விடவே வராதுடா.... ரொம்பப் சின்னப் பயல் இவன்'' என்றான் முடிவாகச் சீனு.

''சின்னப் பயலோட பிடிவாதக்காரனாகவும் இருக்கிறான்'' என்றான் கிட்டு.

''நான் சின்னப் பயலுமில்லே; பிடிவாதக்காரனுமில்லே'' என்று உரக்கக் கத்தினான் சந்துரு.

''சரிதான் வாடா, அவனோட ஏன் வீண் வம்பு. அவன் அம்மா இதைப் பரண்மீது தூக்கிப் போடு முன் நாம் ஆசை தீர ஓட்டி மகிழ்வோம் கிளம்பு'' என்று சீனு முடுக்க, கிட்டுவும் அவனுமாகப் பல தடவைகள் பல வீதிகளையும் சுற்றி வந்தார்கள். இருட்டும் வேளையில் கிட்டுவும் சீனுவும் சந்துருவை அழைத்துக் கொண்டு அவன் வீட்டுக்குப் போனார்கள், அவனையும் அவன் சைக்கிளையும் கொண்டு விட. இவர்களை எதிர் பார்த்துக் கொண்டு நடைபாதையில் சந்துருவின் அம்மா நின்றுகொண்டிருந்தாள். அருகே உயரமாகக் கம்பீரமாக ஒருவர் நின்றுகொண்டிருந்தார். 'சந்துருவின் மாமா வந்து விட்டாரா?' — கிட்டுவின் மனம் அடித்துக்கொண்டது.

''அதோ வருகிறார்களே!'' என்றாள் முகமெல்லாம் சிரிப்பால் மலர சந்துருவின் அம்மா. ''இந்த இரண்டு பையன்களும்தான் நம்ம சந்துருவுக்குச் சைக்கிள் விடக் கற்றுத் தருகிறார்கள். ரொம்பத் தங்கமான குழந்தைகள்... கிட்டு, இவர் சந்துருவோட மாமா!'' என்றாள்.

கிட்டுவும் சீனுவும் கரம் கூப்பி வணக்கம் தெரிவித்தார்கள்.

''குட்... குட்... எங்கே சந்துருப் பயல் எப்படிச் சைக்கிள் விடறான்னு நான் பார்க்கலாமா?'' என்றார் மாமா.

''அவன் வந்து சார்... வந்து...'' என்று தவித்தான் கிட்டு. ''இது...இந்த சைக்கிள் பெரியது. சந்துருவோ ரொம்பச் சின்னவன்....''

'' நான்ஸென்ஸ்....'' கர்ஜித்தார் மாமா. ''புது விஷயங்களைக் கற்றுக் கொள்ள வயதே கிடையாது தெரியுமா? இவன் வயதில்தான் நான் சைக்கிள் விடக் கற்றுக் கொண்டேன். அந்தச் சைக்கிளுக்குப் பிரேக்கே கிடையாது. என் காலத்தில் எந்த சைக்கிளுக்குமே பிரேக் இருக்காது....'' அவர் பார்த்த பார்வையில் சந்துரு பூனை போல அடங்கி ஒடுங்கி சைக்கிள் அருகே போய் நின்றான். சைக்கிள் மீது ஏறி அமரக் கிட்டு உதவ, விழுந்தால் தாங்கிக்கொள்ள சீனு தயாராக நிற்கக் கிட்டு சைக்கிளை உந்தித் தள்ளி விட்டான், தோட்டத்து நடை பாதையில்.


சீனுவின் கைக்கும் அகப்படாமல் சைக்கிள் இப்படியும் அப்படியும் சக்கர வட்டமிட்டு பால்ஸம் பூப்பாத்தியில் போய்த் தாறுமாறாக விழுந்தது. சந்துருவும்தான். அவன் அம்மா அரக்கப் பறக்க ஓடிப்போய் அவனைத் தூக்கிக் கொண்டாள். ''போரும்டா ராஜா... இனிமேல் அதுமேலே நீ ஏறவே ஏறாதே. என் கண்ணுக்கு எங்கே அடிபட்டுது சொல்லு?'' என்றாள் கண் கலங்க.

''சைக்கிள் விடப் பழக்கிக் கொடுப்பது இப்படித்தானா? ஏண்டா பசங்களா? எப்படி இறங்கறதுன்னு அவனுக்குக் கற்றுத் தரவில்லையா?''

''எங்களாலே முடிஞ்ச வரைக்கும் சொல்லித் தந்துட்டோம். அவன் சின்னவன்...''— இது சீனு.


''அதோட ரொம்பப் பிடிவாதம் வேறே...'' இது கிட்டு.

அம்மாவின் அணைப்பி லிருந்து பட்டென்று விலக்கிக் கொண்டு ரோசத்தோடு கத்தினான் சந்துரு. ''நான் சின்னவனுமில்லே, பிடிவாதக்காரனுமில்லே. நான் யாருங்கறதை இப்போ உங்களுக்குக் காட்டறேன். கொஞ்சம் பொறுங்க'' என்றபடி வீட்டுக் கேட்டைத் திறந்து கொண்டு வீதிக்கு ஓடினான் தலை தெறிக்கும் வேகத்தில்.



''சந்துரு, கண்ணே சந்துரு! வாடா'' என்று பதறிப்போனாள் அவன் அம்மா.

மாமாவுக்கும் ஒன்றும் புரியவில்லை. சில நிமிஷங்கள் மௌனமாகக் கலைந்தன. கிட்டுவும் சீனுவும் ஸ்தம்பித்துப் போய் நின்றவர்கள், மெதுவாக ''நாங்க போய் வர்றோம் சார்'' என்று கூறியபடி கேட் வரை போனார்கள். அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. சந்துரு தூரத்தில் கன வேகமாக ஒரு சைக்கிளில் இவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான். அது சின்னச் சைக்கிள். அவன் உயரத்துக்கு ஏற்ற குட்டி சைக்கிள். அட... கிட்டுவுடைய, அவனால் உதாசீனப்படுத்தப்பட்ட பழைய சைக்கிளேதான் அது!



திறந்திருந்த கேட் வழியே விர்ரென்று உள்ளே புகுந்து அவர்கள் முன்னே வந்து கணக்காகப் 'பிரேக்' போட்டு நின்றான் கிட்டு.

''பார்த்தீர்களா? எனக்கும் சைக்கிள் விடத் தெரியும். இதை நானாகவே கத்துக்கிட்டேன். என் சைக்கிளிலே நீங்க ஊர் சுத்திக்கிட்டிருந்தப்போ நான் உன் வீட்டிலிருந்த உன்னோட இந்தச் சின்னச் சைக்கிளிலே 'பிராக்டீஸ்' செய்துக்கிட்டேன். இந்தச் சைக்கிளிலேதான் எனக்கு நல்லா விடவரது.'' பொரிந்து தள்ளினான் சந்துரு.

எல்லாருடைய பார்வையும் டில்லி மாமாவின் மீது பதிந்தன.

''இந்த சைக்கிள் ஏதுடா உனக்கு?'' என்று கேட்டார் மாமா.

''இது கிட்டுவோட சைக்கிள். ஒரு மூலையிலே புழுதி படிஞ்சு கிடந்தது. இதிலே யாருடைய உதவியுமில்லாமே நானாகவே ஏறுவேன். நானாகவே இறங்குவேன். ஆயிரம் தடவை கீழே விழ வேண்டிய அவசியமே இல்லை.'' என்றான் கிட்டுவைப் பார்த்துக் கொண்டே.

''ம்... அப்படியா சேதி?'' என்றார் மாமா. பிறகு தொடர்ந்து சொன்னார்: ''இந்த அளவில்கூட சைக்கிள் இருக்கிறதென்று எனக்குத் தெரியாமல் போச்சு... நாங்கள் சைக்கிள் விடற காலத்திலே எல்லாம் இது மாதிரி சின்னச் சைக்கிள்கள் கிடையாது.''

''நாளைக்கு நான் இதிலே இரண்டு கைகளையும் ஹாண்டில் பாரிலிருந்து எடுத்துவிட்டு ஓட்டப் பழகப் போறேன்'' என்றான் பெருமையோடு சந்துரு.

''ஆனா... கிட்டுவின் சைக்கிளை எப்போதுமே நீ வைத்துக் கொள்ள முடியுமா என்ன?'' என்றாள் அவன் அம்மா. சந்துரு பெரிதா விரிட்டு அலற உதட்டைக்கோணலாக்கிக் கொள்ளும்போதே கிட்டு அவசரமாகக் கூறினான்:

''அதனாலென்ன? சந்துருவே இதை வைத்துக் கொள்ளட்டும்.''

''பார்த்தியாடா கிட்டுவோட நல்ல குணத்தை? அப்போ நான் இந்தப் பெரிய சைக்கிளைப் பரண் மேலே போட்டுடறேன்'' என்றாள் அம்மா.

''எதுக்காகப் பரணுக்குப் போகணும் அது?'' என்றார் டில்லி மாமா. ''இந்தப் பையனோட தாராள மனசை நாம் நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. பையா...உன்பேரு....? ஆ... கிட்டுதானே? சந்துருவோட புதுச் சைக்கிளை அவன் விடுவதற்கு ஏற்ற வயது வரும் வரை நீயேஓட்டிக்கொண்டிரு, என்ன சம்மதமா?''

''சம்மதமா?... ஓ... ஆ... எஸ்... சார்.'' கிட்டுவினால் அந்த ஆனந்தத்தைத் தாள முடியவில்லை. குளறினான், உளறினான். ''அப்படியே ஆகட்டும் சார்...!''

''ரொம்பப் பெருந்தன்மையான பையன் நீ.... உன் சைக்கிள் சந்துருவுக்கு, சந்துரு சைக்கிள் உனக்கு, இந்தா'' என்று அந்தப் புத்தம் புதிய சைக்கிளை—கிட்டு கனவு கண்ட பொக்கிஷத்தை—அவன் கையில் கொடுத்தார் டில்லி மாமா. கிட்டுவுக்கு ஆகாயத்தில் பறப்பது போலிருந்தது. உற்சாகத்துடன் அந்தப் புதுச் சைக்கிளை உருட்டி ஓட்டிக் கொண்டு அதில் ஜிவ்வென்று தாவி ஏறி அமர்ந்தான். டைனமோவைப் போட்டான். அதன் 'ம்ம்' என்ற ஒலியோடு ஒளியை நீட்டியது வீதியில்.

இரு தடவை சைரனை அழுத்தினான். சைக்கிள் பறந்தது. கிட்டுவின் மகிழ்ச்சி எத்தகையதாக இருக்குமென்று உங்களால்தான் உணர முடியும்.


அட சமத்தே! குடிக்கிற பாலைப் பத்தி வியாசம் எழுதச் சொன்னா படிக்கிற பாலைப் பத்தி எழுதியிருக்கியே!
பால் என்பவன் நம் வகுப்பில் படிக்கும் மாணவன். மிகவும் நல்லவன்
"அம்மா, ஓடிவா! நம்ம வீட்டு நாய் சந்திரனைப் பார்த்துக் குரைக்கிறது!"
"இதில் என்ன அதிசயம்? எந்த நாயும் சந்திரனைப் பார்த்துக் குரைக்கத் தானே செய்யும்?"
"அதில்லேம்மா. என் சிநேகிதன் சந்திரனைப் பார்த்துக் குரைக்கிறது. அவன் ரொம்பப் பயப்படறான்!"
"அப்பா, சட்டுனு ஒரு ஆப்பிள் கொடு. தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் டாக்டர் நம்ம கிட்டேயே நெருங்க மாட்டார்னு சொன்னீயே! டாக்டர் வீட்டு ஜன்னல் கண்ணாடியை உடைத்து விட்டேன். அவர் வேகமாக என்னை நெருங்கிக் கொண்டிருக்கிறார்...."
"எழுதிக்கோ. 5000 கரப்புகள் 500 பாச்சைகள், 10,000 மூட்டைப் பூச்சிகள், 500 சிலந்திகள், 1000 பல்லிகள்.....!"
"எதுக்கப்பா இத்தனையும்.....?"
"வீடு எப்படி இருந்ததோ அப்படியே வீட்டைக் காலிபண்ணும்போதும் திருப்பிக் கொடுக்கணும்னு வீட்டுக்காரர் சொல்லியிருக்கிறார்..."
சிரிக்கச் சிரிக்க....!
"என்னடாது, புஸ்தகத்தைத் தண்ணீரில் ஊற வைத்துக் கொண்டு வரே?"
"சரித்திரப் புத்தகம் படிப்பதற்கு ரொம்ப 'டிரை'யாக இருந்தது. அதுக்குத்தான்!"
மியூசியம்
"பயப்படாதே. சும்மாத் தொட்டுப் பாரு. பஞ்சடைத்த சிங்கம்தான் இது."
"ஐயையோ! நான் மாட்டேன். என்னதான் பஞ்சடைச்சிருந்தாலும் என்னைப் போலச் சின்னப் பசங்களுக்கு இடம் வைக்கத்தான் அடைச்சிருப்பாங்க!"
சாமா

பள்ளத்தாக்கில் ஒரு பள்ளிக்கூடம்

'சோமலே'



● ஆலமரத்தடியில் ஆடல் பாடல்



● விடுதிக்கு முன்னே விளையாட்டு.

மனத் தெளிவும் ஆன்மீகச் சிந்தனையும் சிறந்த பேச்சுவன்மையும் உடைய கிருஷ்ணஜி (ஜே. கிருஷ்ணமூர்த்தி) என்னும் மகானைப் பற்றிச் சிலராவது கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் பெயரால் உள்ள அற நிறுவனம், சித்தூர் மாவட்டத்தில் மதனப்பள்ளி அருகில் ரிஷி வாலி என்னுமிடத்தில் ஒரு பள்ளிக்கூடத்தை நடத்துகிறது.

சென்னையிலிருந்து 158 மைல் தொலைவிலும் பெங்களூரிலிருந்து தொண்ணூறு மைல் தொலைவிலும் இப்பள்ளி அமைந்திருக்கிறது. ரிஷிகொண்டா என்ற மலையைச் சார்ந்து கடல் மட்டத்துக்கு மேல் 2,400 அடி உயரத்தில், ஓரளவு குளிர்ச்சியான சூழ்நிலையில் ரிஷிகள் விரும்பும் தன்மையில் ஒரு பள்ளத்தாக்கு உள்ளது. இந்தப் பள்ளிக்கூடம் அங்கே இருக்கிறது.

இந்தக் கல்வி நிலையம் குழந்தைகளின் சிந்தனை ஆற்றலைத் தூண்டிவிடுகிறது. வேலையில் சேருவதற்கு மட்டும் இங்கு மாணவர்களை உருவாக்கவில்லை. முழுமையான வளர்ச்சியும் மனப் பக்குவமும் உடல் வலுவும், கட்டுப்பாட்டு உணர்ச்சி பெறுவதும் போட்டி மனப்பான்மையைத் தவிர்த்தலும் — மாணவர்களுக்குக் கல்விபுகட்டுவதில் தனித் தன்மைகளாக விளங்குகின்றன. பாடங்களை நெட்டுருச் செய்யச் சொல்வது இல்லை. மேயப் போகிற மாட்டுக்குக் கொம்பில் புல்லைக் கட்டி அனுப்பும் பழக்கமும் இங்கு கிடையாது. எது? என்ன? எப்படி? என்று கேட்டு மாணவர்கள் துருவி ஆராயும் பழக்கத்தை ஊக்குவிக்கிறார்கள். எது சரி? எது தப்பு? என்பதை அவர்கள் தாங்களாகவே உணரும்படி ஆசிரியர்கள் இங்கு மாணவர்களைப் பழக்குகிறார்கள்.

இசை, நடனம், ஓவியம், ஆசனம், மலை ஏறுதல் ஆகியவையும் இங்கு பாடத் திட்டத்தின் பகுதிகள்.

எல்லா மதங்களைச் சேர்ந்த மாணவர்களும் இங்கே பயில்கிறார்கள். மதம் என்பது ஏதோ வெறி பிடித்த பிடிவாதமான கொள்கை அன்று. ஆசை பற்று, பொறாமை, தன்னலம், தீய எண்ணம் ஆகியவற்றை நீக்கிவிட்டால், உண்மையான மத நம்பிக்கை இயல்பாக உண்டாகும் என்ற கருத்தை இப் பள்ளியின் பிரின்சிபால் டாக்டர் எஸ். பாலசுந்தரம், அவர்களும் அவர் சகாக்களும் பரப்பி வருகிறார்கள்.



● அழகான சூழலில் ஆராய்ச்சிக் கூடம்.


□ ஆதியில் குருகுல வாசம் செய்து கல்வி பயின்றார்கள். மகரிஷிகளின் குடில்களில், தபோவனங்களில் ஆசிரியருக்குப் பணிவிடை செய்து கல்விச் செல்வத்தைப் பெற்றார்கள். அதை நினைவுபடுத்தும் வகையில் நடத்தப்படும் ஆதர்சப் பள்ளிதான் ரிஷிவாலி பள்ளிக் கூடம். □

இயற்கை எழில் நிறைந்த ரிஷி வாலியில் பள்ளியின் தேவைக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் யாவும் 150 ஏக்கர் பண்ணையில் விளைகின்றன. ஆரஞ்சு, மா, வாழை, கொய்யா, சப்போட்டா ஆகிய பழத் தோட்டங்களும், காய்கறித் தோட்டங்களும், பால் பண்ணையும் பள்ளிக்குச் சொந்தமாக உள்ளன. ஆண், பெண் இருபாலாரையும் இங்கு சேர்த்துக்கொள்கிறார்கள். பாடமொழி ஆங்கிலம். கற்பிக்கப்படும் பிற மொழிகள் — ஹிந்தி, தெலுங்கு, சம்ஸ்கிருதம்.

இங்கு நடத்தும் இறுதித் தேர்வை பி.யூ.சிக்குச் சமமாக இந்தியப் பல்கலைக் கழகங்களும் உலகக் கல்வி நிறுவனங்களும் அங்கீகரித்திருக்கின்றன.


எட்டு வயதுக்குக் குறைந்த குழந்தைகளை இங்கு சேர்த்துக் கொள்வதில்லை. பல வகையான விளையாட்டுக்கள் விளையாடவும், நீச்சலடிக்கவும் கைத்தொழில்கள் பழகிக் கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. மருத்துவமனை, நூல் நிலையம், பௌதிகம், ரசாயனம், உயிர்நூல், சோதனைக் கூடங்கள், உணவு விடுதிகளாகப் பல சிறிய கட்டடங்கள் ஆகியவற்றுக்கும் இங்கே குறைவில்லை.

கல்வி ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் வரை. ஓராண்டுக் கட்டணம் ரூ. 2,500. உடை முதலிய செலவுகள் வேறு. இந்தியப் பண்பாட்டிலும் சைவ உணவிலும் நம்பிக்கை உள்ளவர்களுக்கு இது மிகச் சிறந்த பள்ளி என்பதில் ஐயமில்லை. குறிப்பிட்ட மாணவருக்கு முட்டை தேவை என்று டாக்டர் கருதினால் அதையும் அவனுடைய உணவாகச் சேர்த்துக் கொடுப்பார்கள்.



● இளநிலைப் பள்ளி

● அருளாளர் கிருஷ்ணாஜி





ஜெய் ஹனுமான் 1
கதை: ரா.கணபதி சித்திரம்: வினு
கேசரி! தங்கமயமான இந்த மேருவனத்துக்கு உன்னை அரசனாக்கு கிறேன்.
சூரிய பகவானால் மேருவனத்துக்கு அரசனாக்கப்பட்ட கேசரிக்கு புத்திர பாக்கியம் கிட்டவில்லை.
நம் வம்சம் விளங்க இன்னும் ஒரு குழந்தை பிறக்கவில்லையே....
நான் வழிபடும் சூரிய பகவான் எனக்கு நாடு அளித்தார். நீ வழி படும் வாயு பகவானிடமிருந்து நமக்கு ஒரு குழந்தைச் செல்வத்தைப் பெற்று வாயேன்.
கணவனின் கட்டளைப்படி அஞ்சனை வனத்தில் தவமிருக்கிறாள் வாயு பகவானை நோக்கி.
அஞ்சனா! உன் உறுதி குலையாத தவத்தைக் கண்டு மகிழ்ந்தேன். என்னுடைய அளவற்ற சக்தியைப் பெற்ற ஓர் உத்தமமான பிள்ளை உனக்கு மகனாகப் பிறப்பான்.
நான் பாக்கியசாலியானேன் தேவா!



அதேசமயத்தில் அங்குள்ள ஒரு மரத்தில் சிவனும் உமையும் வானரவடிவில் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது சிவபிரானிடமிருந்து ஓர் ஒளி புறப்பட்டது.
சிவ ஒளியை வாயு பகவான் தன் வசம் இழுத்து, அத்துடன் தன் ஒளியையும் கலந்து ஓர் ஒளியாக்கி அவ்வொளியை...
அஞ்சனாதேவிக்கு அருளுகிறார். அந்த ஒளி அவள் உடலில் பாய்ந்த அதே விநாடி....
அப்பேரொளியின் உருவாக ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்துக் கொண்டாள், அஞ்சனாதேவி.
எங்கள் குலம் தழைக்க வந்த செல்வமே! உன் பசிக்குச் சுவை மிக்க பழங்களைப் பறித்து வருகிறேன்! இப்படியே படுத்திரு புல் தரையில்.
குழந்தைக்குப் பசி தாங்கவில்லை. அப்போது கீழ் வானத்தில் செங்கதிரோன் தோன்றுகிறான்.
அதோ! சிவப்பாக ஒரு பெரிய பழம். என் பசியை அது போக்கும்...


அவ்வளவுதான்! வாயுவின் பிள்ளையல்லவா? சூரியப் பழத்தைப் பிடிக்க வானத்திலே கிளம்பிவிட்டது.
இதென்ன அதிசயம்! பிறந்த குழந்தைக்கு எத்தனை பசி? இத்தனை வீரமும் வேகமுமா?
வாயு குமாரனல்லவா?
அது மட்டுமல்ல, சிவ சக்தியும் கலந்த குழந்தையாயிற்றே!
அதோ பார், பிள்ளைப் பாசத்தை! கதிரவனின் வெப்பம் குழந்தையைத் தாக்காதிருக்க வாயுபகவான் தன் மகன் மீது குளிர்ந்த காற்றை வீசிக் கொண்டு போகிறான்.
இன்னொரு அதிசயத்தைப் பார்த்தாயா? சூரியனுக்கும் அக்குழந்தையின் விளையாட்டு இன்பமாக இருக்கிறது போலும். அதை வருத்தாமல் தன் கிரணங்களைச் சுருக்கிக் கொண்டு விட்டானே!
வாயுகுமாரன் சூரியனை நெருங்கி விட்டான். அப்போது அவர்களுக்கிடையே திடீரென்று ஒரு கரும்பாம்பு தோன்றியது.
தொடரும்

பறக்கும் வண்ணத்துப் பூச்சி



மேலே உள்ள வண்ணத்துப் பூச்சியின் உருவத்தை அப்படியே 'டிரேஸ்' செய்து கொள்ளுங்கள். அதை மறுபடியும் ஒரு கார்ட்போர்ட் அட்டையில் பதிவு செய்து இரண்டு வண்ணத்துப் பூச்சிகளை வெட்டிக் கொள்ளுங்கள். இரண்டிலும் ஒரு பக்கத்தில் மட்டும் உங்கள் கைத்திறமையைக் காட்டி வண்ணம் பூசுங்கள். பழைய செப்புக் காசுகள் (1 பைசா) இரண்டு எடுத்துக் கொள்ளுங்கள். கொஞ்சம் நீளமான ஒரு குண்டூசியை எடுத்து, முனையைத் தவிர மற்றப் பாகத்தைச் சற்று தட்டையாகச் சுத்தியால் தட்டிக் கொள்ளுங்கள். வண்ணத்துப் பூச்சிக்கு வண்ணம் தீட்டாத பகுதிகளில் பசையைத் தடவுங்கள். (இரண்டு அட்டைகளிலும்) படத்தில் காட்டியபடி பசை தடவிய ஒரு படத்தில் A. B. என்ற இடங்களில் செப்புக் காசைப் பசையில் பதிய வைத்து ஒட்டி விடுங்கள். குண்டூசி முனை வண்ணத்துப் பூச்சியின் தலையின் முன் பாகத்தில் மூக்குப் போல் நீண்டு இருக்கும்படி கொஞ்சம் வெளியே தெரியும்படியும், மற்றவை அட்டையில் இருக்கும்படியும் வையுங்கள். பசை தடவிய மற்றொரு பூச்சிப் படத்தை இதன் மீது ஒட்டிக் காசு, குண்டூசி இருக்கும் இடங்களில் நன்றாக அழுத்துங்கள். உங்கள் வேலை முடிந்தது. சிறிது நேரம் வெயிலில் காய விடுங்கள். பிறகு வண்ணத்துப் பூச்சியை எடுத்து அதன் குண்டூசியின் முனையைக் கைவிரல் முனையில் இருக்கும்படி வையுங்கள். பட்டாம்பூச்சி இப்படியும் அப்படியும் ஆடியபடி அப்படியே நிற்கும். கீழே விழவே விழாது. எந்த இடத்தில் அதை அதன் ஊசி முனையில் நிற்க வைத்தாலும் அப்படியே ஆடி அசைந்து நிற்கும். விழாது. காகிதப் பென்சிலின் மீது நிற்கவைத்தபடி மின் விசிறியைப் போட்டால் வண்ணத்துப் பூச்சி பறந்துகொண்டே பூவில் தேன் குடிப்பது போல் ஆடுவது வெகு அழகாக இருக்கும்.

— ஆ. தேவராஜ்

முரளி

க. முத்துசாமி



'**சு**டுகாட்டுப் பேய்', 'பேய் சொன்ன ரகசியம்', 'பேய்க்குப் பயப்படு', 'தாயானாலும் பேய்' இவையெல்லாம் என்ன என்கிறீர்களா? நமது கதையின் நாயகன் முரளியின் அலமாரியில் அடுக்கடுக்காய் இருக்கும் புத்தகங்களில் ஒரு சில.

முரளி ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். அவன், பாடப் புத்தகங்களைவிடப் பேய்க் கதைப் புத்தகங்களையும், மர்ம நாவல்களையுமே சுவாரஸ்யமாக விரும்பிப் படித்தான். பேய்க் கதைகள் கூறுவதில் சமர்த்தனாகவும் விளங்கினான்.

அதோ.... அவன் வீட்டுத் திண்ணையில் ஒரு கூட்டம். சின்னஞ்சிறு பிள்ளைகளை வைத்துக் கொண்டு தான் படித்த பேய்க் கதைகளையெல்லாம் ஒவ்வொன்றாக அவன் கூறிக் கொண்டிருந்தான்.

''ராத்திரி பன்னிரண்டு மணி. ஒரே கும்மிருட்டு; அந்தப் பேய் வந்து, அவன் கழுத்தை நெரித்தது.'' தன் கழுத்துக்கருகே கைகளைக் கொண்டு போய்ப் பாவனையும் காட்டினான் முரளி.

''அம்மாடியோவ்!'' ஒரு சிறுமி அலறிக் கொண்டு ஓடினாள்.

''ஏய், முரளி! ஒழுங்காய் இருக்க மாட்டாயா? பொழுது போகும் நேரத்தில் சின்னப் பிள்ளைகளைக் கூட்டி வைத்துக் கொண்டு இப்படியா பய முறுத்தும் கதைகளைச் சொல்லுவது?'' அவன் அம்மா ஓடி வந்தாள். முரளி எழுந்து ஓடினான். குழந்தைகள் கூட்டமும் கலைந்தது.

* * *

''ஆ, பேய் வருது, பேய்!'' தூங்கிக் கொண்டிருந்த சிறுமி செல்வி அலறினாள் கனவு கண்டு.

''ஏண்டா, கண்ணா! செல்வி தூங்கும் போது இப்படி அலறுகிறாளே ஏன்?'' அம்மாதான் கேட்டாள் அவனை.

கண்ணனுக்கு என்ன தெரியும்? அவன் விழித்தான். அவன், பொழுது விடிந்தால் வேலையுண்டு, தானுண்டு என்று பக்கத்தில் உள்ள நகரத்துக்குப் போய் விடுவான்; காலையில் இருட்டின பிறகுதான் திரும்புவான். முரளி செய்யும் வேலைதான் தன் தங்கை செல்வியைத் தூக்கத்தில் அலற வைக்கின்றது என்று அவனுக்கு எப்படித் தெரியும்?

''தெரியலேம்மா!'' என்றான் கண்ணன்.

பொழுது விடிந்தது. ''ஏண்டி, செல்வி! ஏன் ராத்திரி 'பேய் வருது' என்று அப்படி அலறினே?''

செல்வியின் மனத்தில் முரளியின் கதைகள் படர்ந்து, பல பேய்களை ஆட விட்டுப் பயத்தை உருவாக்கிக் கொண்

டிருந்தன. எப்போதும் பேயைப் பற்றிய பயத்திலேயே மனத்தை அலட்டிக் கொண்டிருந்தாள் செல்வி. இருள் படர ஆரம்பித்துவிட்டால், வீட்டை விட்டு வெளியே தலை காட்டவும்மாட்டாள், இப்போதெல்லாம். செல்வி மட்டுமென்ன அந்தத் தெருப் பிள்ளைகள் எல்லோருக்குமே பேய்ப் பயத்தை உருவாக்கி விட்டான் முரளி.

''அம்மா!''

''என்னடி செல்வி.... சொல்லு, ஏன் அப்படி உளறினே?''

''அடுத்த தெருவிலே நாலாவது வீட்டு முரளி இருக்கு பாரும்மா — அதான் பேய்க் கதையெல்லாம் சொல்லி எல்லாரையும் பயமுறுத்துது!''

கண்ணன் வேலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். ''கண்ணு! அந்த முரளியை உனக்குத் தெரியுமா?''

''தெரியுமே — அடிக்கடி அவன் டவுனுக்கு வருவானம்மா. சரியாய்ப் படிக்கிறதே இல்லேன்னு கேள்வி!''

''அவனைப் பார்த்தா அதட்டி வையேன். இப்படிச் சின்னஞ்சிறு பிள்ளைகளைப் பயமுறுத்திக்கிட்டு இருக்கானுமே கடன்காரன்!''

''சரிம்மா, கண்டிச்சு வைக்கறேன்!''

கண்ணன் வேலைக்குப் போய்விட்டான் 'டவுனை' நோக்கி.

''செல்வி! நீயும் ஒழுங்கா இரு. அடுத்த தெரு முரளிகிட்டே பேய்க் கதை கேட்கப் போற வழக்கத்தை நிறுத்தி ஒழுங்கா இங்கேயே விளையாடணும். இல்லே......''

''சரியம்மா! இனிமே நான் போக மாட்டேன்.''

அன்று சாயங்காலம், ஏதோ முக்கிய பாடப் புத்தகம் வாங்கப் போவதாக அம்மாவிடம் சொல்லி விட்டு டவுனுக்குப் புறப்பட்டான் முரளி.

'இருட்டுவதற்குள் திரும்பிவிட வேண்டும்' என்று எண்ணிக் கொண்டே விறுவிறுவென்று நடந்தான்.

''காட்டில் உலவிய பேய்'', ''இருட்டு உருவம்'', ''இரத்த வெள்ளம்'' ஆகிய மூன்று புதிய புத்தகங்கள் அன்று கடையில் வந்திருந்தன. ஒரு ரூபாயைக் கொடுத்து மூன்றையும் வாங்கிக் கொண்டான் முரளி.

புத்தகம் வாங்கிக் கொண்டிருந்த போதே சாலையில் ஏதோ பெரும் சத்தம் கேட்டது. முரளி திரும்பிப் பார்த்தான். ஓர் ஆள் கார் விபத்தில் சிக்கி — அவர் உடம்பிலிருந்து இரத்தம் ஓடிக் கொண்டிருந்தது. முரளிக்குத் தலை சுற்றியது. சாலையில் ஒரே கூட்டம்.

கூட்டத்தில் நின்று கொண்டிருந்த முரளிக்கு நேரம் போனதே தெரியவில்லை. கடை 'லைட்'டெல்லாம் எரிய ஆரம்பித்து விட்டன.

'நேரம் போனதே தெரியாமல் நின்றுவிட்டோமே!' என்று எண்ணிக் கொண்டே முரளி வேகமாகப் புறப்பட்டான். பயனில்லை. அவன் ஊருக்குப் போகும் சாலை கரியடைந்து பயங்கரமாகக் காட்சி அளித்தது. ஒரு விளக்கு கூடக் கிடையாது. எங்கும் இருள். தாரைக் காய்ச்சி ஊற்றியது போல் ஆகிவிட்டது இருளில்!



'பயம்' மனத்தைப் பயங்கரமாகக் கவ்வ நடந்து கொண்டிருந்தான் முரளி.

மெள்ள மெள்ளப் பாதி தூரம் வந்துவிட்டான். எவ்வளவோ நேரம் அதற்குள் பறந்துவிட்டது. விரிந்து படர்ந்து நின்ற ஆலமரம் ஒன்று பாதைக்கருகே இருந்தது. அதைக் கண்ட முரளிக்குப் பயத்தில் கண்கள் மேலும் இருண்டன. மூச்சைப் பிடித்துக் கொண்டு ஆலமரத்தருகே வந்தான்.

'ஐயோ!' முரளிதான் அலறினன். வெளவால் ஒன்று அவன் கன்னத்தில் தட்டிவிட்டு ஓடியது; பயந்தே போனன் முரளி. நெஞ்சம் ஆடியது.

''ஏய்....... நில்!'' ஆலமரத்தின் பின்னிருந்து பயங்கரமான பேய்ச் சத்தம்; சிரிப்பு. முரளி நிலேகுலேந்து கால்கள் நடுக்கமுற்று நின்ருன்.

'' பேய்க் கதைகள் சொல்லிக் குழந்தைகளைப் பயமுறுத்துவது நீதானே....? அந்தப் புத்தகங்களையெல்லாம் வாங்குவதும் நீதானே......? உன்னே....!'' ஆலமரத்தின் பின்புறமிருந்து ஒரு கறுப்பு உருவம் கைகளே விரித்துக் கொண்டு முரளியை நோக்கி வந்தது.

முரளி அலறியடித்துக் கொண்டு ஓடினன். எவ்வளவு வேகமாக ஓடினன் என்று அவனுக்கே தெரியாது. திரும்பிப் பார்க்கவே இல்லே. அவன் வீட்டில்

குழந்தைகளிடம் போகும் மிருகக் காட்சிசாலே

மிருகக் காட்சி சாலேக்குப் போவதென்ருல் குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களுக்குமே கூட ஒரு தனியான உற்சாகம்தான். பல்வேறு வகைப்பட்ட பிராணிகளேயும் பறவைகளேயும் ஒருசேர ஒரே இடத்தில் பார்ப்பதில் யாருக்குத்தான் மகிழ்ச்சி ஏற்படாது? ஆனல் மிருகக் காட்சிசாலேகள் பெரிய நகரங்களில்தானே இருக்கும்? மற்ற ஊர்களில் உள்ளவர்கள், அதுவும் நகரங்களில் அடுக்கு மாடிக் கட்டிடங்களில் வாழும் குழந்தைகளுக்குப் பிராணிகளோடு தொடர்பே இருக்க முடியாதே. மிகச் சாதாரண ஆடு, மாடு, கோழி, வாத்து, கழுதை, குதிரை இவைகளேக் கூட நெருக்கமாகக் காண அடுக்கு மாடிக் கட்டிடங்களில் வாழும் குழந்தைகளுக்கு வாய்ப்பேது?

லண்டன் நகரத்தில் இதற்காகக் குழந்தைகளிடம் மிருகக் காட்சி சாலேயையே கொண்டுபோகும் ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்தி வெற்றிகரமாக நடத்தி வருகிருர்கள். கிரேட்டர் லண்டன் கவுன்ஸில் (GLC) என்ற அமைப்பு குழந்தைகளுக்காகவே தனிப்பட்ட வகையில் மிருகக் காட்சிசாலேகளே நடத்தி வருகிறது. இது சம்பிரதாயமான பெரிய மிருகக் காட்சிசாலேகளுக்குப் போட்டியில்லே. குழந்தைகள் மிருகக் காட்சிசாலேகளில் சிங்கம், புலி, யானே இவையெல்லாம் இருக்காது. குழந்தைகளுக்கான மிருகக் காட்சிசாலேகளில், சாதுவானதும் பழக்கப்பட்டதுமான அபாயமற்ற சின்னஞ்சிறு பிராணிகள் தன்னிச்சையாகச் சுற்றித் திரியும். குழந்தைகள் அவைகளின் அருகில் போகலாம், கட்டி அணைத்துக் கொள்ளலாம், தொட்டுத் தடவிக் கொடுக்கலாம். பெரிய மிருகக் காட்சிச் சாலேகளேப் போல் 'இவைகளேத் தொடக்கூடாது' என்ற கட்டுப்பாடு ஏதும் கிடையாது. சின்னச் சின்னக் குட்டிப் பிராணிகள் வளர்ந்து விட்ட பிறகு கையாள முடியாத அளவுக்குப் பெரியதானல் அவைகளேப் பெரிய மிருகக் காட்சிச் சாலேக்கு அனுப்பிவிடுவார்கள். ஆட்டுக் குட்டிகள், குட்டிக் குதிரைகள், சிம்பன்ஸி குரங்குகள், வகை வகையான வண்ணப் பறவைகள், பேசும் மைனக்கள், கிளிகள், நீர்நாய்கள், பல வகை அணில்கள், மான் வகைகள், முயல்கள், கினியாப் பன்றிகள், குட்டையான கழுதைகள், குட்டையான ஆடுகள் —இப்படி அபாயமற்றதும் குழந்தைகள் நெருங்கிப் பழகுவதற்கு ஏற்றதுமான மிருகங்களேத் தேடிப் பிடித்து இந்த மிருகக் காட்சிச் சாலேகளில் சேமித்திருக்கிருர்கள். இவைகளுக்குக் கூண்டுகளோ அடைப்புக்களோ கிடையாது. குழந்தைகள் தாராளமாக இவைகளேத் தொட்டுத் தடவிக் கட்டித் தழுவி விளேயாடலாம்.

லண்டன் பூந்தோட்டங்களில் வெகு காலமாகவே இம்மாதிரிப் பிராணிகள், பறவைகளுக்காக ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுத்தான் இருந்தது. ஆனல் குழந்தைகளுக்காகத் தனிப்பட்ட முறையில் தரம் பிரித்த பிராணிகள், பறவைகளேக் கொண்ட மிருகக் காட்சிச் சாலேயை 1953ல் லண்டன் மாகாணக் கவுன்சில் தொடங்கியது,கிறிஸ்டல் பாலஸ்மைதானத்திலே. கொஞ்சம் கொஞ்சமாக இந்த அமைப்பு வளர்ந்து பிரபலமடைந்து,

வந்துதான் நின்றான். கையைப் பார்த்தான். புத்தகங்களைக் காணவில்லை.

முரளியின் கால்கள் தரையில் பாவவில்லை. வியர்வை ஒழுகியது. ''என்னடா, முரளி? ஏன் இப்படி உடம்பெல்லாம் ஆடறது?''

அவன் அம்மா கேட்டதற்கும் பதில் சொல்லவில்லை. ஓடிப் போய்ப் படுக்கையில் விழுந்தவன்தான், அப்படியே உறங்கி விட்டான்.

பொழுது விடிந்தது. முரளி, அலமாரியில் அடுக்கியிருந்த புத்தகங்களையெல்லாம் அள்ளி வைத்தான். அத்தனையும் பேய்க் கதைகள்! துப்பறியும் நாவல்கள்! எல்லாவற்றுக்கும் சேர்த்து நெருப்பு வைத்தான். அன்று முதல் முரளி ஒழுங்காய் நடக்கவும், படிக்கவும் ஆரம்பித்துவிட்டான். முரளியின் அம்மாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

''கண்ணா!'' என்று கூப்பிட்டாள் அவன் அம்மா.

''முரளி, இப்போ ஒழுங்காய்ப் படிக்கிறானாம். பேய்க் கதைப் புத்தகங்களுக்கெல்லாம் நெருப்பு வைச்சிட்டானாம். நல்ல பையனாக மாறிவிட்டானாமே!''

''அப்படியா!'' என்றான் கண்ணன்.

அன்று இரவு ஆலமரத்தடியில் தான் பேயாக நாடகமாடிய கதையைத் தன் அம்மாவிடம்கூட ஏனோ கண்ணன் சொல்லவில்லை!

ஏராளமான குழந்தைகளை வசீகரித்தது. இந்தக் குழந்தைகள் மிருகக்காட்சி சாலையில் பல இந்திய மிருகங்களும், பறவைகளும் கூட இடம் பெற்றிருக்கின்றன.

1965ல் குழந்தைகள் மிருகக்காட்சி சாலை நிர்வாகிகள், காட்சிசாலை, குழந்தைகளைத் தேடியே போகும் ஒரு திட்டத்தை வகுத்துச் செயல்படுத்தினார்கள். நடமாடும் குழந்தைகள் மிருகக் காட்சி சாலை 'என்று பெயர் இதற்கு. ஜனங்கள் நெருக்கமாக வசிக்கும் பகுதிகளில் ஏற்றதோர் இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு நிலையான காட்சி சாலையிலிருந்து கொண்டு போகக்கூடிய முக்கிய மிருகங்களைக் குதிரைகள் இழுக்கும் பெட்டி வண்டிகளில் வைத்துக் கொண்டு போவார்கள். அதன் கூடவே அவைகளைப் பராமரிக்கும் உதவியாளர்களும் போவர். அங்குள்ள சோலைகளில் இந்தப் பழக்கப்பட்ட சாதுவான மிருகங்கள் குழந்தைகள் தொட்டுப் பழகும்படி விடப்படும். இந்த மிருகங்களையும் குழந்தைகளையும் உள் அடக்கியவாறு கம்பி வலைத் தடுப்புச்சுவர்கள் அமைக்கப்படும். குட்டிக் குதிரைகளில் குழந்தைகள்சவாரி செய்யலாம். மைனாவோடு பேசி மகிழலாம். மான்குட்டிக்குப் பசும் புல்லை வாயிலே ஊட்டலாம். முயலுக்குக் காரட் கொடுக்கலாம். அணிலின் பட்டு உடலைத் தொட்டு மகிழலாம்.

இப்படிக் குழந்தைகளின் மகிழ்ச்சிக்காகவும் அவர்களுடைய அறிவு வளர்ச்சிக்காகவும் மேல் நாடுகளில் என்னென்னவோ செய்து கொண்டிருக்கிறார்கள். நம் சென்னை நகரில் உள்ள மிருகக் காட்சி சாலை வண்டலூருக்குப் போகப் போகிறதாம். இது கிண்டல் இல்லை.

படமும் தகவலும்: பிரிட்டிஷ் தகவல் நிலையம்



பிரஷ்னேவைப் போட்டுப் பாருங்கள்!

—தாணு



அடுத்த இதழில் யார்?

ஆலம் பழமும் ஆண்டவன் அருளும்

ஆல மரத்தின் நிழல் தனிலே
அயர்ந்து படுத்தான் ஒரு மனிதன்
ஆல மரத்தின் பெருங் கிளையில்
அழகாய்த் தொங்கின சிறு கனிதான்.

பெரிய மரத்தினில் சிறு கனியைப்
படைத்த தேனென எண்ணுகிறன்
பெரிய காயினைச் சிறு கொடியில்
படைத்த வேடிக்கை எண்ணுகிறன்.

எத்தனை பெரியது இம்மரந்தான்
இத்தனை சின்னக் கனிதானே ?
எத்தனை பெரியது பூசணி தான்
இளைத்த கொடியினில் பாரமதாய்.

கடவுள் செய்த இத்தவறு
கவனப் பிசகால் செய்ததுவோ
இடமோ டுயர்ந்த மரத்தினிலே
திரண்ட பெருங்கனி காய்த்திருந்தால்..

சிந்தனை செய்துமே அம்மனிதன்
சிரிய தெய்வத்தின் சிருஷ்டி தன்னை
நிந்தனை செய்துமே துயிலுகிறன்
நிழலில் நித்திரைச் சுகம் கண்டான்.

மரத்துக் கிளையினில் பறவை சில
மகிழ்ந்து கனியினை உண்ணுகையில்
மரத்தில் பழுத்த கனி உதிரும்
மனிதன் தலையில் கொட்டி விடும்

தூக்கம் கலைந்த மனிதனுமே
துடைத்துக் கொண்டான் தலைமுகமே.
ஏக்கம் மனத்தினுள் சூழ்கிறது
இவையே பெருங் கனியாயிருந்தால்...?

''நிழலில் தங்கும் மனிதருக்கே
நிம்மதி தருமே பெரும் மரங்கள்
பழமும் பெரிதாய்ப் பழுத்திருந்தால்
படுத்தோர் தலையில் பட்டுடைக்கும்

இறைவன் செய்த கருணையிது
இத்தனை சின்னக் கனியமைத்தான்
இறைவன் கருணையை அறியாமல்
இழிவாய் எண்ணிய பாவியும் நான்''

எழுந்து தன்வழி ஏகிவிட்டான்
எல்லாம் இறைவனின் திட்டமடா !
கொழுந்துத் தணலாம் வெயிலினிலே
கொடுத்த கருணையே நிழல் மரமோ!

மஹறி



அற்புத விளக்கு

கு. இராமசாமி

அன்று முதல் தேதி. ஆசிரியர், 'அலாவுதீனும் அற்புத விளக்கும்' கதையை மிக சுவாரஸ்யமாகச் சொல்லிக் கொண்டிருந்தார். ''...இவ்விதமாகப் பல ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் அநேக அற்புதங்களைச் செய்த அலாவுதீனின் விளக்கு பூமியினுள் புதைந்து போனதாகக் கதைகள் கூறுகின்றன'' என்று ஆசிரியர் கூறிக் கொண்டு இருந்த போது, பியூன் பிச்சை அங்கு வந்தான். ''தலைமை ஆசிரியர் உங்களைக் கூப்பிடுகிறார் சார்'' எனக் கூறிய பியூன், ''ஏன் சார் அந்த அற்புத விளக்கு இனி மேல் வெளியே வருங்களா?'' என்று தமாஷாய்க் கேட்டான். ''வந்தால் உனக்குச் சொல்கிறேன். நீ போய் எடுத்துக் கொள்'' என்று ஆசிரியர் சிரித்தார். அதைக் கேட்டுப் பியூனும் பலமாய்ச் சிரித்தான். மாணவர்களும் சிரிப்பில் ஆழ்ந்தனர். வகுப்பறை எங்கும் சிரிப்பொலி எதிரொலித்தது. ஆனால்....

சுரேஷ் என்ற மாணவன் மட்டும் அற்புத விளக்கு பற்றிய சிந்தனையிலேயே மூழ்கி மெய்மறந்து இருந்தான். பள்ளி முடிந்ததும் மாணவர்கள் துள்ளி ஓடினர். சுரேஷ் யாரையும் கவனியாமல் எதையோ பறிகொடுத்தவன் போல் மெல்ல நடந்து வீடு வந்து சேர்ந்தான். அவன் மனம் எதிலுமே நாட்டம் கொள்ளவில்லை. இரவு பாடம் படிக்கவில்லை; உண்ணவில்லை; நள்ளிரவுக்கு மேல்வரை உறங்கவும் இல்லை. மன மேடை முழுதும் ஒரே சிந்தனையே நடனமாடியது. 'அந்த அற்புத விளக்கு மீண்டும் தோன்றி நமக்குக் கிடைத்தால்....' ஆசை அ யாய் விரிந்தது. தன்னையே மறந் சுரேஷ் தூங்கிவிட்டான்.

விடுமுறையானதால் காலை ஏ மணிக்குப் பிறகுதான் சுரேஷ் எழு தான். நேற்று ஆசிரியர் சொன் அற்புத விளக்கின் மகிமை இன்னு அவனை மயக்கிக் கொண்டிருந்தத சாப்பாட்டுக்குப் பின் அவன் மன விளையாட்டை நாடவில்லை. அற்பு விளக்... நினைவிலேயே தெருக்கோ யில் உட்கார்ந்து ஒரு பலூனை ஊ

வும், காற்றை விடவுமாக இருந்தா பின்னால் யாரோ ''தம்பி'' என்று கூ பிடும் குரல் கேட்டுத் திரும்பிய சுரே திகைத்துவிட்டான். அங்கே –

ஏறத்தாழ ஆசிரியர் வர்ணித் மந்திரவாதி போன்று – பரட்டை தலை, தாடி மீசை; அதனுள் புதைந் உருளும் விழிகள்; பழைமையான கறுப் கோட், காவியேறிய வேஷ்டி இத் யாதியுடன் நின்றிருந்த ஒருவன் க வுடன், '' உன் பேரென்ன தம்பி ? என்றான். குழப்பத்திலிருந்த சுரே தன் பெயரைச் சொன்னான். ''என்ன யாரென்று கேட்க நினைக்கிறாய், இ லையா?'' என்றான் வந்த புதியவ ஆம் என்பதுபோல் சுரேஷ் தலை அசை




தான். புதியவன் தொடர்ந்தான்: ''நான் பெரிய தவயோகி. பல ஆண்டுகள் தவம் செய்தேன். ஒரு நாள் அன்னை பராசக்தி என் முன் தோன்றினுள். அப்போது பல ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் பூமியில் புதைந்த அலாவுதீனின் அற்புத விளக்கு மீண்டும் இப்போது வெளிவந்து மறைந்திருக்கும் இடத்தைக் கூறி மறைந்தாள்.'' ஆச்சரியத்தில் ஆழ்ந்த சுரேஷ் மந்திரத்தால் கட்டுண்டவன் போல் வந்தவன் முகத்தையே பார்த்தபடி இருந்தான். வந்தவன் பேசிக் கொண்டேயிருந்தான். '' ஆனுல்..... அதை நான் எடுத்தால் மறைந்து விடுமாம். உன் வயதுப் பாலகன்தான் எடுக்க வேண்டுமாம். அன்னையே இதையும் கூறினுள். எனவே, நீ என்னுடன் வந்து அந்த விளக்கை எடுத்துத் தந்தால், உனக்கு நூறு ரூபாய் தருவேன்'' என அன்பு பொங்கக் கூறி முடித்தான்.

வந்த புதியவனை நம்புவதா, கூடாதா என்று சுரேஷ் குழம்பினுன். '' என்ன யோசிக்கிருய் தம்பி? என் மேல் உனக்கு நம்பிக்கை இல்லையென்ருல், இப்பொழுதே நூறு ரூபாய் வைத்துக் கொள். வா, வந்து உதவி செய்'' எனக் கூறியபடி புதியவன் ஒரு நூறு ரூபாய் நோட்டை சுரேஷின் முன் நீட்டினுன். சிறிது நம்பிக்கையும், தைரியமும் கொண்ட சுரேஷ் மனத்துள் திட்டமிட்டான்—'அற்புத விளக்கு மட்டும் கிடைக்கட்டும். வேண்டியதெல்லாம் வேண்டியவாறு பெறலாமே! இவன் தரும் நூறு என்ன, அற்பப் பிச்சைக் காசு. வேண்டுமானுல் இவனையும்கூட அழித்துவிடலாமே!'—ஆசை ஆட்கொண்டதால் தன் அறிவை இழந்தான் சுரேஷ். ரூபாய் வாங்கிக் கொள்ளாமலேயே வந்த புதியவனுடன் கூட வரச் சம்மதித்து விட்டான். வீட்டில் யாரிடமும் சுரேஷ் சொல்லவே இல்லை. இருவரும் நெடுந்தூரம் பஸ்ஸில் பிரயாணம் செய்து, பிறகு நீண்ட தூரம் நடந்து முடிவில் புதர் நிறைந்த காட்டை அடைந்தனர். அற்புத விளக்கைக் காணப் போகும் ஆசை வேகத்தில் சுரேஷ் ஆர்வத்துடன் நடந்தான்.

தவயோகி என்று தன்னைக் கூறியவன் அந்த அடர்ந்த காட்டினுள் இருந்த ஒரு பாழடைந்த வீட்டை நோக்கிச் சென்ருன். இருவரும் அந்த வீட்டினுள் சென்றனர். புதியவன் வீட்டுக் கதவைத் தாழிட்டு மூடினுன். பயம் கொண்ட சுரேஷ் சமாளித்துக் கொண்டு, ''இங்கே எந்த இடத்தில் அற்புத விளக்கு இருக்கிறது?'' என்ருன். அதுவரை சாதுவாய் இருந்த புதியவன் இதைக் கேட்டதும் பலமாய்ச் சிரித்தான். அவ்வொலி பாழடைந்த அந்த வீடு முழுவதும் எதிரொலித்தது. கனிவாய் இருந்த அவன் முகம் கடுமையாய் மாறியது. தவயோகி எனச் சொன்னவன் தரங்கெட்ட முரடனுனுன். பேராசையால் பெருந்தவறு செய்து விட்டதை எண்ணி சுரேஷ் பயத்தால் நடுங்கினுன்.

சிரித்து முடித்த முரடன், ''அற்புத விளக்கா ? அது கிடைக்குமென்ருல், அதுவே எனக்குப் போதுமே! உன்னை ஏன் கடத்தி வர வேண்டும்?'' எனக் கொக்கரித்தான். '' என்னை என்ன செய்யப் போகிருய் ?''—சுரேஷ் தேம்பினுன். முரடன் தொடர்ந்தான்: ''உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன். எனக்குத் தேவை நீயல்ல, பணம். ம்... இந்தக் கடிதத்தில் நான் சொல்வதுபோல எழுது'' என்று கோட்டுப் பையிலிருந்து ஓர் 'இன்லண்டு' கவரை



யும், பேறுவையும் தந்தான். வேறு வழியின்றி நடுங்கிய கரத்துடன் அவன் சொல்வதை யெல்லாம் அதில் எழுதித் தனது தந்தையின் முகவரியையும் எழுதினான் சுரேஷ்.

கடிதத்தை வாங்கிக்கொண்ட முரடன் கட்டளை இடுவது போன்று கடுமையுடன், ''சொல்வதை நன்றாகக் கவனித்துக்கொள். நீ இன்னும் நான் கைந்து நாட்களுக்கு இங்குதான் இருக்க வேண்டும். நான் நாளை இரவுதான் வருவேன். அதுவரை அந்தப் பெட்டியிலுள்ள காய்ந்த ரொட்டியைத் தின்று கொள். பாட்டிலில் உள்ள நீரைக் குடித்துக்கொள். தப்பிப் போக எண்ணாதே. இங்கு யாருமே வருவதில்லை. இது பேய் வீடு. தெரிந்ததா? ம்... நான் வருகிறேன்'' எனக் கூறியபடி பலமாய்ச் சிரித்துக் கொண்டே கதவை வெளியே பூட்டிவிட்டுச் சென்றான். இவ்வளவு பயத்திலும் நடுக்கத்திலும் சுரேஷின் மூளையில் ஒரு பொறி தட்டியது — இந்த முரடன் சிரித்த இதே சிரிப்பையும், பேச்சின் சாயலையும் எங்கோ கேட்டதாக நினைவு வந்தது... எங்கே? அப்போதிருந்த நிலையில் இதற்கு மேல் அவனால் யூகிக்க முடியவில்லை. அப்படியே அழுது புரண்டான் சுரேஷ்.

***

''சார் போஸ்ட்'' — குரல் கேட்டதும் சுரேஷின் தந்தை வெளியே வந்து தபாலை வாங்கிப் பிரித்துப் பார்த்தார். சுரேஷின் தாயும் ஓடிவந்தாள். நேற்றிலிருந்து தங்கள் மகனைக் காணவில்லை என்ற கவலையிலிருந்த அவரது கையும் குரலும் கடிதத்தைக் கண்டு நடுங்கின.

அன்புள்ள அப்பா,

நான் கடத்தி வரப்பட்டு ஒரு பாழடைந்த வீட்டில் அடைத்து வைக்கப்பட்டுள்ளேன். நாளை மறு தினம் இரவு 10 மணிக்கு ரூ. 1000 எடுத்துக் கொண்டு நீங்கள் மட்டும் நமது ஊர்க் காளி கோவில் கிணறு அருகே வந்தால், கடத்தி வந்தவன் என்னை விட்டுவிடுவானாம். போலீசில் சொன்னால் விபரீதம் நேருமாம்.

இப்படிக்கு

அன்பு மகன் சுரேஷ்.

கடிதத்தில் உள்ளூர் முத்திரை மட்டுமே இருந்தது. வேறு முத்திரையே இல்லை. ஏதோ மர்மமான சூழ்நிலையில் அந்தத் தபால் போஸ்ட் செய்யப்பட்டுள்ளது என எல்லோரும் கலக்கமுற்றனர். தபாலைப் போலீஸில் கொடுப்பதென முடிவு செய்தனர். அதன் மூலம் போலீஸாரும் தீவிர முயற்சி எடுத்தனர். ஆனால் எவ்விதப் பலனும் இல்லை.

மறு நாள் இரவு வருவதாய்ச் சொல்லிச் சென்ற முரடன், பிறகு ஒரு நாள் கழித்துத்தான் வந்தான். இரண்டு நாட்களில் பசியாலும் பயத்தாலும் சுரேஷ் துவண்டு போயிருந்தான். அன்றும் அந்த முரடன் கறுப்பு கோட்தான் அணிந்திருந்தான். சுரேஷ் அவனை உற்றுக் கவனித்தான். அவனது சிரிப்பையும், குரலையும் கூர்ந்து கேட்டு யாரென அறிய முற்பட்டான்.

முரடன் கனத்த குரலில் பேசினான்: ''ம்... ரொட்டியைத் தின்று விட்டாயா? இந்தா இந்த ரொட்டிப் பார்சலையும், தண்ணீர்ப் பாட்டிலையும் வைத்துக்கொள். உனது தபால் வேலை செய்யத் தொடங்கி விட்டது. நாளை மறு தினம் இரவு எனக்கு ஆயிரம் ரூபாய் கிடைத்துவிடும். உன் பெற்றோர்கள் போலீசில் சொல்லி யிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் என்னை யாரும் கண்டு பிடித்து ஒன்றும் செய்துவிட முடியாது'' இவ்வாறு சொல்லிக் கொண்டு சிரித்தபடியே, சவால் விடுபவன் போன்று, வலது கையினால் இடது கைக் கோட்டை மேலே ஏற்றினான். அப்போது அவனது இடது முன்கை தெரிந்தது. அங்கே—''பிச்சை'' என்று பச்சை குத்தப்பட்டு இருந்தது. கவனத்துடன் இருந்த சுரேஷின் கண்களில் அதிர்ஷ்டவசமாக அது பட்டுவிட்டது. சுரேஷிற்கு உடனே ''டக்'' என்று நினைவு வந்து விட்டது. — அதே சிரிப்பு — தவயோகி போல வேடமிட்டுத் தன்னைக் கடத்தி வந்தவன் பள்ளிக்கூட பியூன் பிச்சைதான் என்பதை நன்கு அறிந்து கொண்டான். ஆனால் அதை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. நாளை மறு தினம் வந்து சுரேஷை அழைத்துச் செல்வதாகக் கூறிவிட்டுக் கதவை வெளியே தாழிட்டுச் சென்றான், முரடன் பிச்சை.

இந்த உண்மையைப் பெற்றோருக்கு எப்படித் தெரிவிப்பது எனத் திட்டமிட்டு இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தான், சுரேஷ். ரொட்டி கட்டி வந்த பேப்பரில் ஒரு துண்டு கிழித்து ''நான் எனது பள்ளிப் பியூன் பிச்சையினால் கடத்திக் கொண்டு வரப்பட்டுள்ளேன்'' என எழுதி, அவனது பள்ளியின் முகவரியையும் அதில் எழுதினான். பிறகு ரொட்டி கட்டி வந்த நூலில் அந்தக் காகிதத் துண்டைக் கட்டி, தான் வைத்திருந்த பலூனை ஊதி, அந்த நூலின் மறு முனையினால் இறுக்கிக் கட்டினான். கஷ்டப்பட்டுத் தாவிச் சாளரத்தின் வழியே அந்தப் பலூனை வெளியே பறக்க விட்டான். நூலில் கட்டிய தாளுடன் பலூன் பறந்து சென்றது.


அந்தக் காட்டில் விறகு வெட்டச் சென்ற ஒருவன் அந்தப் பலூனைக் கண்டான். அதனுடன் இருந்த காகிதத்தில் எழுதியிருந்ததை வாசித்தான். விஷயம் அறிந்ததும் பயம் கொண்ட விறகு-வெட்டி, அந்தக் காகிதத்தை உள்ளூர் போலீஸிடம் ஒப்படைத்தான். உடனே அங்கிருந்து சுரேஷ் ஊரிலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குத் தகவல் அனுப்பப்பட்டது. சப் — இன்ஸ்பெக்டர் சுரேஷின் பெற்றோருக்குச் சொல்லி அனுப்பிவிட்டு, பள்ளிக்குச் சென்று தலைமை ஆசிரியரிடம் விஷயத்தைக் கூறி — ஒன்று மறியாத அப்பாவி போல அன்றும் பள்ளிக்கு வந்திருந்த பியூன் பிச்சையைக் கைது செய்தார். போலீஸ் கொடுத்த அடி தாங்காமல் பிச்சை உண்மையை ஒப்புக்கொண்டான். அவன் தந்த தகவலின் பேரில் போலீஸாரும், சுரேஷின் பெற்றோர்களும் அந்தப் பாழடைந்த வீட்டை அடைந்து அதை உடைத்துத் திறந்தனர். அங்கே —

சுரேஷ் பசியாலும் பயத்தாலும் வாடி, அழுது அழுது கண் சிவந்து, முகம் வீங்கிப் படுத்திருந்தான். தன் தாயைக் கண்டதும் அழுதுகொண்டே வந்து கட்டிக் கொண்டான். பெற்றோர் மகிழ்ந்தனர். சுரேஷின் தகப்பனார் இன்ஸ்பெக்டருக்கு நன்றி கூறினார். பிறகு, ''சுரேஷ்! நீ பேராசையால் பெருந் தவறு செய்து விட்டாய். ஆசிரியர் கதையில் கூறிய அற்புத விளக்கு வரப்போவதில்லை. கதைப்படியே பூமியில் புதைந்து உள்ளது என்றாலும், அதனால்தான் பூமியிலிருந்து பொன்னும், பொருளும், தாவரமும் கிடைக்கின்றன எனக் கொள்ள வேண்டும். ஆனால் அவையெல்லாம் பூதத்தால் கிடைக்காது. நமது உழைப்பினால்தான் கிடைக்கும். நீ அதை மறந்து தவறு செய்து விட்டாய். இப்படிக் குறுக்கு வழியை இனிமேல் மனத்தாலும் நினைக்காதே'' என ஆறுதலும், அறிவுரையும் கூறினார். ''அதிக ஆசையால் அறிவிழந்து விட்டேன். இப்போது திருந்தி விட்டேன். இனித் தவறே செய்ய மாட்டேன். என்னை மன்னித்து விடுங்கள் அப்பா'' என வேண்டினான் சுரேஷ். எல்லோரும் ஊர் வந்து சேர்ந்தனர். பியூன் பிச்சை சிறைத் தண்டனை பெற்றான்.

தெரிஞ்சுக்கோ


விட்டில் பூச்சிகளில், 'மரணத் தலையன்' விட்டில் பூச்சி என்று ஒன்று இருக்கிறது. அதன் முதுகில் மனிதனின் மண்டையோட்டு உருவமும் அதன் கீழே இரண்டு விலா எலும்புகளின் உருவமும் தெளிவாகக் காணப்படுகின்றன. அதனால்தான் அந்த விட்டில் பூச்சிக்கு 'மரணத் தலையன்' விட்டில் பூச்சி என்று பெயரிட்டிருக்கிறார்கள்!





'ஃபிலிக்கர் தங்க இறக்கை' என்னும் மரங்கொத்திப் பறவை எப்போதும் நான்கு முட்டைகள் இட்டுத்தான் அடைகாக்கும். நான்குக்குக் குறைந்து அது அடைகாக்காது! பறவை ஆராய்ச்சியாளர் ஒருவர், அதன் கூட்டிலிருந்து ஒரு முட்டையை எடுத்து விட்டார். மூன்று முட்டைகளே இட்டிருப்பதாக எண்ணிய அந்தப் பறவை, மறுபடியும் ஒரு முட்டை இட்டு, எண்ணிக்கையை நான்காக ஆக்கியது. கூட்டிலிருந்து மறுபடியும் ஒரு முட்டையை எடுத்தார் அந்த ஆராய்ச்சியாளர். மறுபடியும் அந்தப் பறவை ஒரு முட்டை இட்டது. இப்படியே அவர் எடுக்க, அந்தப் பறவை மீண்டும் முட்டை இட, கடைசியில் அந்தப் பறவை இட்ட முட்டைகளின் எண்ணிக்கை 71 ஆகியது! ஆனால், கூட்டிலிருந்த முட்டைகளோ நான்குதான்!

வாசனைத் திரவியங்கள் தயாரிக்க உதவும் அம்பர் கிரிஸ் என்னும் பொருள், ஸ்பெர்ம் திமிங்கிலத்தின் சிறு குடலில் உற்பத்தியாகிறது. மெழுகு போன்ற அந்தப் பொருள் உற்பத்தியாவது அந்தத் திமிங்கிலத்துக்கு வரும் ஒரு நோயினால்தான்! குடலுக்குள் இருக்கும்போது அந்தப் பொருள் கெட்ட நாற்றம் கொண்டிருக்கும். வெளிக் காற்றுப் பட்டவுடன் அதற்கு அபரிமிதமான மணம் வந்து விடுகிறது! - ஆழி



தெரியுமா?

927. பெண்டகனுக்கு எத்தனை பக்கங்கள் ?

928. ஒரு முக்கோணத்துக்கு மொத்தம் எத்தனை டிகிரிகள்?

929. உலகத்தைக் கடல் மூலம் முதலில் சுற்றி வந்தவர் யார் ?

930. ஸிம்பாப்வே (Zimbabwe) இடிபாடுகள் உள்ள நாடு — தெற்கு ரொடீஷியா, காங்கோ, தங்கனீகா, வடக்கு ரொடீஷியா — இவற்றில் எது சரி?

931. ராக்கீஸ் எங்குள்ளது?

932. டைஃபூன் என்பது — ஒரு வியாதி, செல்வந்தர், கோமாளி, புயல் — இவற்றில் எது சரி ?

933. புராண இதிகாசங்களில் வரும் குரு, பாஞ்சால, கோசல ராஜ்யங்கள் இன்றைய பாரதத்தில் எந்த மாகாணத்தில் இருந்தன தெரியுமா?

934. மகா அலெக்சாந்தருக்கு முன்னால் பாரதத்தில் அந்நியரின் ஆதிக்கம் ஏற்பட்டதுண்டா?

935. கனிஷ்கருக்குப் பிறகு குஷான் இனத்தவரில் ஆட்சிக்கு வந்த மன்னரின் பெயர் என்ன?

936. குஷானர்களின் கடைசி மன்னர் யார்?

937. குஷானர்கள் பாரதத்தின் எந்தப் பகுதியில் அரசாண்டார்கள்?

938. ஆர்யபட்டர், வராஹமிஹிரர் என்ற பெயர்களைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இவர்கள் எதற்குப் புகழ் பெற்றவர்கள்? யார் அவையை அலங்கரித்தார்கள் தெரியுமா?

939. அஜந்தா ஓவியங்கள் இந்திய சரித்திரத்தில் எந்த வம்சத்தவரின் புகழுக்குக் காரணமாக விளங்குகிறது?

940. சமுத்திரகுப்தரைத் தெற்கில் எதிர்த்து நின்ற அரசர் யார்? எந்த வமிசத்தவர் தெரியுமா?

941. பாஹியான் என்ற சீன யாத்திரிகர் யாருடைய ஆட்சியின்போது பாரதத்துக்கு வந்தார்?

942. மூன்று பெரிய சாம்ராஜ்யாதிபதிகளைச் சந்தித்த சீன யாத்திரிகர் யார் தெரியுமா? அவர் சந்தித்த அரசர்கள் யார் யார்?

943. மலாயாவின் தலைநகர் எது?

944. சூப்பர் மார்க்கெட்டின் லட்சணம் என்ன தெரியுமா?

945. பவழத் தீவு (Coral Island) என்ற குழந்தைகள் இலக்கியத்தை எழுதியவர் — ஸ்டீவன்ஸன், கிப்ளிங், பாலண்டைன், டானியல் டிஃபோ— இவர்களில் யார்?

946. பிரேஸில் நாட்டில் மக்கள் அதிகமாகப் பேசும் மொழி எது தெரியுமா ?

947. கீழ்க்கண்டவைகளில் மிகச் சிறியது எது ? சூரியன், சனி, செவ்வாய், சந்திரன்.

948. நைல் நதியின் உற்பத்தி ஸ்தானம் எது தெரியுமா ?

949. கிரகங்களில் மிகப் பெரியது எது ?

950. தங்க வாசல் பாலம் (Golden gate Bridge) எங்குள்ளது?

951. கன்றுக்குட்டியின் இறைச்சிக்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்? (அகராதி புரட்டும் பழக்கம் வேண்டும்.)

952. மஞ்சள் ஆறு — ஜப்பானில், சீனாவில், இந்தியாவில், ஆஸ்திரேலியாவில் உள்ளது. இதில் எது சரி ?

953. வெடிமருந்தைக் கண்டு பிடித்தவர்கள் யார் ?


954. அமெரிக்காவின் பிரபலமான விளையாட்டு — கிரிக்கெட், பேஸ்பால், ஹாக்கி, சாஸர் — இவற்றில் எது ?

955. வெள்ளை மாளிகை உள்ள இடம் நியூயார்க்கா, வாஷிங்டனா ?

தெரியுமே!

விடைகள்: 927. ஐந்து. 928. நூற்று எண்பது. 929. ஃபெர்டினண்டு மெகல்லன். 930. வடக்கு ரொடீஷியாவில். 931. வட அமெரிக்காவில் 932. புயல்.. 933. உத்தரப் பிரதேசத்தில். 934. உண்டு. கி. மு. 514ல் பாரசீக மன்னரான முதலாம் டேரியஸ் சிந்து நதிப் பள்ளத்தாக்கைக் கைப்பற்றினார். அதிலிருந்து 200 ஆண்டுகள் வரை பஞ்சாபில் பாரசீகர்களின் ஆட்சி நடந்தது. 935. ஹுவிஷ்கர். 936. வாசுதேவர். 937. பஞ்சாபிலும் காபூல் பள்ளத்தாக்கிலும். 938. ஆர்ய பட்டர் இந்திய கணித இயலுக்கும், வராஹமிஹிரர் வான இயலுக்கும் புகழ் சேர்த்தவர்கள். இரண்டாம் சந்திரகுப்தரின் அவையை. 939. குப்தர்களின் பொற்காலத்துக்கு. 940. விஷ்ணுகோபன், பல்லவ மன்னன். 941. இரண்டாம் சந்திரகுப்தரின் ஆட்சியில். 942. ஹர்ஷர், சாளுக்கிய புலிகேசி, நரசிம்மபல்லவர் இவர்களுடைய சாம்ராஜ்யங்களுக்கு விஜயம் செய்தவர் ஹ்யூன்சாங் என்ற சீனயாத்திரிகர். 943. கோலாலம்பூர். 944. வாடிக்கையாளர்கள் தாங்களே பொறுக்கி எடுத்துச் சேமித்துக்கொண்டு, வெளியே செல்லும் இடத்திற்குப் போனதும் அவைகளுக்கு உரிய தொகையை ஒரு சிப்பந்தியிடம் போட்டு வசூலிப்பார். இதுதான் சூபர்மார்க்கெட் இயங்குகிற முறை. நம் நாட்டில் இப்படி இல்லை. 945. ஆர். எம். பாலண்டைன். 946. போர்த்துகீசிய மொழி. 947. சந்திரன். 948. விக்டோரியா ஏரி. 949. ஜூபிடர். 950. சான்பிரான்ஸிஸ்கோவில். 951. வீல் (Veal) என்று பெயர். 952. சீனாவில் உள்ளது. 953. சீனர்கள். 954. பேஸ்பால். 955. வாஷிங்டன்.

அறிமுகப்படுத்துகிறோம் ஆக்பா ஐஸோலி 1
முதன்முறையாக இந்திய அமெச்சூர் புகைப்படக் கலைஞர்களுக்கு



Agfa® ISOLY-I

1. மூன்று ஷட்டர் வேகப் பொருத்தங்களுடன் லீவரை இயக்குவது இலகு. 2. நுட்பத் தெளிவுடன் சோபிக்கும் படங்களுக்கான அக்ரோமாட் f8 லென்ஸ். பாதகமான சூழ் நிலைகளிலே எடுக்கப்படும் படங்களின் சரியான எக்ஸ்போஷருக்கு உறுதி தரும் 2 லென்ஸ் ஸ்டாப்கள். 4. 120 சைஸ் ரோல் பிலிமிலே 16 (4x4 செமீ) படங்களைத் தருகிறது (6x6 செமீ சைஸ் உடையதை விட 4 அதிகம்). விசேஷ லாக்கிங் பொறி யமைப்பை உடைய பிலிம் கவுட்டுக் குமிழ். இரட்டை எக்ஸ்போஷரைத் தடுத்திடுகிறது. 5. 'இரட்டை எக்ஸ்போஷர் லாக்' இயக்க நிலையில் இருப்பதை காட்டுகிறது சிவப்புநிற எச்சரிக்கை விளக்கு.

திரையிடலுக்கெனப் பளிச்சென்ற ஆக்பா
கலர் டிரான்ஸ்பேரென்ஸிகளையும் எடுக்கிறது
ஆக்பா ஐஸோலி I. தெள்ளத் தெளிவுள்ள
பிரிண்டுகளுக்கும், என்லார்ஜ்மெண்டுகளுக்கும்
எப்போதுமே குறிப்பிட்டுக் கோருவீர்
ஆக்பா-கேவார்ட் போட்டோத் தாள்களே.

தயாரிப்பாளர்கள் : நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்., பரோடா.

ஏகபோக விநியோகஸ்தர்கள் :
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்,
பம்பாய் • நியூ டெல்லி • கல்கத்தா • சென்னை
• புகைப்படச் சாதனங்களின் தயாரிப்பாளர்களான
ஆக்பா-கேவார்ட், ஆன்ட்வெர்ப்/லீவர்குஸன்
அவர்களின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.

விலை:
ரூ. 143/-
எக்ஸைஸ்
தீர்வை
உள்ளிட்டது.
பிற வரிகள்
தனி.

ஆக்பா ஐஸோலி I—
ஆர்வத் துடிப்புள்ள
அமெச்சூர்களுக்கான
காமிரா.

எங்கெங்கே பெட்ரோலியம் தயாரிப்புக்கள் தேவையோ அங்கெல்லாம் சேர்ப்பிக்கிறோம்

நாடு நெடுகப் பரவிய சேமிப்பு, வினியோகப் பணிகள் மூலம் இண்டியன் ஆயில், பெட்ரோலியம் தயாரிப்புக்களை இடையறாது சப்ளை செய்தவண்ணம், தேச சேவை புரிந்துவருகின்றது.

200க்கும் மேற்பட்ட நிர்மாணிப்புக்கள், மொத்தவாரி டெப்போக்கள், விமான எரிபொருள் நிலையங்கள், 3000க்கும் மேற்பட்ட பெட்ரோல்/டீசல் நிலையங்கள் ஆகியவற்றின் உதவியால், தங்கள் தயாரிப்புக்களை எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் சேர்ப்பித்துவருகின்றது இண்டியன் ஆயில். எல்லாவிதப் போக்குவரத்து சாதனங்களும் இதன் பொருட்டு ஈடுபடுத்தப் படுகின்றன— கரைப்புற டாங்கர்கள், பைப்லைன்கள், ரெயில் டாங்கு வாகன்கள், டாங்கு டிரக்குகள், டாங்கு வண்டிகள் எல்லாமே.

1971-72லே இண்டியன் ஆயில் 140 லட்சம் கிலோலிட்டர் அளவுள்ள தயாரிப்புக்களை விற்பனைக்கு விடுத்துள்ளது—இதன் மூலம், நாட்டின் தேவையிலே ஏறக்குறைய 55 சதவிகித அளவை ஈடுசெய்து, நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கும், தேசப் பாதுகாப்புக்கும் அரும்பணி ஆற்றியுள்ளது.





INDIANOIL —பொருளாதார வளமைக்கான தேசியப் பொறுப்புறவு

இண்டியன் ஆயில் கார்பொரேஷன் லிமிடெட்.

Dattaram-IOC-34

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: சதாசிவம்






ராசுவும் வாசுவும் பாப்பின்ஸ் கொள்ளையை முறியடித்த சாதனை
ஓசையடங்கிய ஓரிரவு ராசு, வாசு இருவருமே ஓய்ந்துறங்கிய வேளை...
கள்ளன் ஒருவன் மெள்ள உள்ளே புகுந்தானாம் ஜன்னல் வழியாக...
வெள்ளி, தங்கம் ஏதும் விரும்பாமலே கள்ளன் அள்ளினானும் பாப்பின்ஸ்.
கோர்ட்டிலே நீதிபதி தீட்டினாராம் தண்டனை திருடனுக்குச் சிறைவாசம்.
பாலகர் இருவருக்கும் பரிசளித்தார் பெரிசாய் பாப்பின்ஸ் பாக்கெட்டு!
ருசியானவை
அருமையானவை
பிரமாதமானவை
5 பழரசச் சுவை வகைகள்—
ராஸ்ப்பெர்ரி, அன்னாசி,
எலுமிச்சை,
ஆரஞ்சு, சாத்துக்குடி.
ஒவ்வொரு சுருளிலும் 13
மிட்டாய் வில்லைகள்—
PARLE POPPINS
பார்லே
பாப்பின்ஸ்
பழரச மிட்டாய்கள்